தனிச்சுற்றுக்கு மட்டும்

நன்கொடை ரூ.5.00

மடல் 1 இதழ் 2 ஆகஸ்டு 20, 2007

# கோவைக் குரல்

கோவை நகர மேம்பாட்டுக்கான மக்கள் கண்காணிப்புக் குழுவின் செய்தி மடல்

கோவையின் மனசாட்சி

## ஐ.எல்.எஃப்.எஸ். தரகனின் அளவில்லா அட்டகாசம்



நிழற்படம்: A.ராஜா சிதம்பரம்

## வாக்குமூலமும், உண்மையும்

### கூண்டுகளில் அடைபடும் மனிதர்கள்

## பில்லூர் இரண்டாம் கட்டக் குடிநீர்த் திட்டம் தனியாருக்கு விட வேண்டிய அவசியமில்லை

# வாக்குமூலமும், உண்மையும்



**வே.ந. உதயகுமார்,**
*கோவை மாநகராட்சி*
*தி.மு.க. தலைவர்*

♦ தமிழக முதல் அமைச்சர் கருணாநிதியின் முயற்சியால் கோவை மாநகராட்சியில் மத்திய அரசின் திட்டம் ரூ.3 ஆயிரத்து 186 கோடி செலவு செய்யப்பட உள்ளது.

♦ இந்தத் திட்டம் குறித்து கோவை மாநகராட்சியின் மாமன்றத்திலும் பல்வேறு வட்டங்களிலும் விளக்கக் கூட்டங்கள் மாநகர நிர்வாகத்தால் நடத்தப்பட்டுள்ளது.

♦ அதில் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், குடியிருப்போர் நலச் சங்க நிர்வாகிகள் மற்றும் அனைத்துக் கட்சியை சேர்ந்த கவுன்சிலர்கள் கலந்துகொண்டு தங்கள் கருத்துக்களைத் தெரிவித்து உள்ளனர்.

♦ எனவே இந்தத் திட்டம் பற்றி மக்களுக்கு முழுமையாக விளக்கப்பட்டுள்ளது.

*(13.8.2007, தினத்தந்தி)*

**கோவைக் குரல்**

♦ *மாண்புமிகு தமிழக முதலமைச்சர்* ***கலைஞர்*** *அவர்களின் முயற்சியால் இந்தத் திட்டம் கோவைக்குக் கிடைத்திருக்கிறது* ***என்பது தவறான கருத்தாகும்.*** *2004 ஆம் ஆண்டின் இறுதியில் இந்தியாவின் 63 நகரங்களை மத்திய அரசு இந்தத் திட்டத்திற்காகத் தேர்ந்தெடுத்தது. தேர்வுக்கான அடிப்படை அந்நகரங்களின்* ***மக்கள்தொகைதானேயொழிய பிற காரணங்கள் அல்ல.*** *மேலும் இந்தத் திட்டத்திற்கான மூலகர்த்தா அமெரிக்காவின் USAID நிறுவனம் என்பதை ஆதாரப் பூர்வமாக சென்ற இதழ் "கோவைக் குரல்" நிரூபித்திருக்கிறது. தக்க ஆதாரங்களுடன் இதை உங்களால் மறுக்க முடியும் என்றால் எங்கள் கருத்தைத் திருத்திக் கொள்ள நாங்கள் தயாராகவே இருக்கிறோம்.*

♦ *திட்டம் குறித்து பல்வேறு விளக்கக் கூட்டங்களை மாநகராட்சி நடத்தியிருக்கிறது என்பதும் அதில் தன்னார்வ அமைப்புகளும், குடியிருப்போர் சங்கங்களும், கவுன்சிலர்களும் கலந்துகொண்டார்கள் என்பதும்* ***உண்மையே. ஆனால்*** *அந்தக் கூட்டங்களில் கேட்கப்பட்ட கேள்விகள் எதற்கும் இன்றுவரை பதில் கூற மாநகராட்சி முன்வரவில்லை என்பதுதான் உண்மை.* ***ஆளும் கட்சிக் கவுன்சிலர்கள் கேட்ட கேள்விகளுக்குக் கூட மாநகராட்சி பதில் கூறவில்லை*** *அல்லது கூறத் தயாராயில்லை என்பதற்கான செய்தி ஆதாரங்கள் உள்ளன.*

♦ *மேலும் இந்தக் கூட்டங்களில் கலந்துகொண்ட* ***தன்னார்வத் தொண்டு நிறுவனங்களும்,*** *குடியிருப்போர் நலச் சங்கங்களும்* ***நகரத்தின் மேல்தட்டு*** *மக்களைச் சார்ந்தவர்களே. நகரில் பெரும்பான்மையாக வாழும் நடுத்தர மற்றும் அடித்தட்டு மக்களால் 2007 ஜனவரியில் இருந்து நடத்தப்பட்டுவரும்* ***"கோவை நகர மக்கள் கண்காணிப்புக் குழு"****வினை இந்தக் கூட்டங்களுக்கு நீங்கள் அழைக்கவில்லை என்றாலும் கூட அந்தக் குழுவானது இன்றுவரை* ***"கோவை நகரத்தின் ஜவகர் திட்டம் குறித்த பல்வேறு ஆய்வறிக்கைகளை"*** *உங்கள் அனைவருக்கும்* ***முறைப்படி தவறாது கொடுத்து வந்திருக்கிறது.*** *கோவை ஜவகர் திட்டத்தினை வரவேற்கும் அதே வேளையில் இந்த அறிக்கைகள் யாவும் அதனை* ***நடைமுறைப் படுத்தும் வழி முறைகள்*** *குறித்து உங்களிடம் இருந்து அடிப்படையில்* ***வேறுபடுகின்றன.*** *தம் நிலைப்பாட்டிற்கான தக்க சமூக, அறிவியல் மற்றும் சட்ட ரீதியான சான்றுகளையும் அவை முன் வைத்திருக்கின்றன.*

♦ *இருப்பினும்* ***இவ்வறிக்கைகள் மற்றும் மாற்றுக் கருத்துகள் எவற்றிற்கும் உங்கள் கட்சியோ, மதிப்பிற்குரிய மேயர் அவர்களோ, கமிஷனரோ பதில் கூறத் தயாராயில்லை.*** *கடந்த 8 மாதங்களாக மௌனமே உங்கள் பதிலாக இருந்திருக்கிறது.*

♦ ***திட்டம் குறித்த "உங்கள் கருத்தை" மக்களிடம் எடுத்துச் சென்றிருக்கிறீர்கள்*** *என்பது வேண்டுமானால் சரியான வாக்குமூலமாக இருக்கலாம்.* ***திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் உங்களிக்கிருக்கும் பார்வை தவறானது*** *என்பதையும், அந்தப் பார்வை* ***நகர மக்களின் எதிர்கால நல்வாழ்விற்குப் பயனளிப்பதற்குப் பதில் உலக அளவில் இயங்கும் வட்டிக் கம்பெனிகளுக்கும், முதலாளிமார்களுக்குமே உபயோகப்படும்*** *என்பதையும் ஆதாரப் பூர்வமாக "****கோவை நகர மக்கள் கண்காணிப்புக் குழு" நிரூபித்திருக்கிறது.*** *நிரூபித்தும் வருகிறது. இந்த ஆதாரங்களைத்* ***தவறு என்று நிறுவும் சான்றுகளை நீங்கள் முன்வைக்காதவரை "திட்டம் பற்றி மக்களுக்கு முழுமையாக விளக்கியிருக்கிறோம்" என்ற உங்களின் வாக்குமூலம் உண்மைக்குப் புறம்பானதாகவே இருக்கும்.***

அமைதிப்பூங்கா அறக்கட்டளை
கோணங்கள் திரைப்பட இயக்கம்
கோப்மா
கோயமுத்தூர் வாசக வட்டம்
கோவை ஊழல் எதிர்ப்பு இயக்கம்
கோவை நகர குடிசைவாழ் மக்கள் இயக்கம்
கோவை மாநகர படைப்பாளிகள் இயக்கம்
சலீம் அலி நேச்சுரலிஸ்ட் ஃபோரம்
சிட்டிசன்ஸ் வாய்ஸ் கிளப்
தந்தை பெரியார் திராவிடர் கழகம்
தமிழ்நாடு அண்ணல் அம்பேத்கர் சுகாதார துப்புரவு மற்றும் பொதுப்பணியாளர்கள் சங்கம்
தமிழ்நாடு அனைத்து தங்க நகை தொழிற்சங்கம்
தமிழ்நாடு முஸ்லீம் முன்னேற்றக் கழகம்
தமிழோசை
நொய்யல் பாதுகாப்பு இயக்கம்
பீளமேடு நுகர்வோர் குரல்
மக்கள் சக்தி இயக்கம்
மக்கள் சர்வோதய இயக்கம்
ஜெ.சி.குமரப்பா அறப்பணி இயக்கம்
மக்கள் சிவில் உரிமைக் கழகம்
மனித உரிமை பாதுகாப்பு மையம்
ஐக்கிய ஜமாத்
தமிழ்நாடு கைத்தொழில் மற்றும் குறுந்தொழில் முனைவோர் சங்கம்
JAQH
Muslim Education & Empowerment Trust
AICCTU

ஆசிரியர் குழு

*Dr.இரா.இரமேஷ்*
*இரா.கோபாலன்*
*கோப்மா கருப்பசாமி*
*கார்க்கி*
*கு.மகேந்திரன்*
*ரியாசுதின் அகமது*
*Dr.R.பரமசிவம்*
*G.தண்டபாணி*

தொடர்புக்கு
*பொன். சந்திரன்*

தொலைபேசி
9443039630

இணைய தளம்
http://kovaikural.wordpress.com

மின் அஞ்சல்
coimbatorewatchdog@gmail.com

## ஆளும் கட்சியினரின் கவனத்திற்கு!
## சிந்தித்து, நிதானத்துடன் செயல்படுங்கள்

3186 கோடி நகர மேம்பாட்டுத் திட்டம் நகரில் தொடங்கியிருக்கிறது. வரவேற்கிறோம். எனினும் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் நீங்கள் மேற்கொண்டுவரும் நடவடிக்கைகள் பல சந்தேகங்களையும், அச்சங்களையும் ஏற்படுத்தியிருக்கின்றன.

ஜவகர் திட்டத்தின் முதல் படி 97 கோடி ரூபாய் மதிப்புள்ள குப்பை மேலாண்மைத் திட்டம். இதில் முதலீடு செய்வதற்காக உலக அளவில் உள்ள முதலாளிகளை ஜீலை 4 ஆம் தேதியன்று அழைத்திருக்கிறீர்கள். விண்ணப்பம் செய்த முதலாளிகளில் தகுதியானவரைத் தேர்ந்தெடுக்கும் நாள் ஆகஸ்டு 6 ஆம் தேதி. உங்கள் சார்பாக உலக முதலாளிகளை அழைக்கும் பொறுப்பையும், தேர்வு செய்யும் பொறுப்பையும் ஐ.எல்.எஃப்.எஸ். என்ற சர்வதேச கந்துவட்டி ஈட்டுக் கம்பெனிக்காரனிடம் கொடுத்துள்ளீர்கள்.

**திட்டத்தை மாநகராட்சியே ஏற்று நடத்துவதன் மூலம் மாதத்திற்கு சுமார் 2-4 கோடி ரூபாய் சம்பாதிக்க முடியும் என்ற சந்தேகத்திற்கு இடமற்ற அறிவியல் உண்மையை "கோவைக் குரல்" முதல் இதழில் வெளியிட்டிருந்தோம்.** இன்றுவரை இது செவிடன் காதில் ஊதிய சங்காகவே இருக்கிறது. "இவ்வளவு பணம் மாநகராட்சிக்குத் தேவையா? அதை வெளிநாட்டு முதலாளிமார்கள் தின்று விட்டுப் போகட்டுமே" என்ற கரிசனத்தோடு திட்டம் நகர்ந்து கொண்டிருக்கிறது.

**ஜவகர் திட்டத்தின் மூலம் நடக்கவிருக்கும் அனைத்து பணிகளையும் "சர்வதேச டெண்டருக்கு விட்டுத்தான் நடத்த வேண்டும்" என்பது திட்டத்தின் அடிப்படை விதி என்று உங்களில் சிலர் கடந்த காலத்தில் வாதிட்டிருக்கிறார்கள். இது உண்மைக்குப் புறம்பான செய்தி. நகர மேம்பாட்டுத் திட்டத்தை நடத்தும் மத்திய நகர மேம்பாட்டு அமைச்சகத்துடன் கோவை மாநகராட்சி 2006 ஜீலை 29 ஆம் தேதியன்று செய்து கொண்ட ஒப்பந்தத்தில் அப்படிப்பட்ட ஷரத்து எதுவும் இல்லை.** *( சந்தேகம் உள்ளவர்கள் இந்த ஒப்பந்த அறிக்கையை எங்கள் இணைய தளம்* www.kovaikural.wordpress.com *-இல் இருந்து பதிவிறக்கம் செய்து சரி பார்த்துக் கொள்ளலாம் )*

நகரக் குப்பையை சொந்தமாக்கி வருடத்திற்கு சராசரி 20-40 கோடி ரூபாய்ப் பணத்தை மாநகராட்சியால் சம்பாதிக்க முடியும். அதாவது அடுத்த 20 வருடங்களில் சுமார் 400-800 கோடி ரூபாயை ஈட்டக்கூடியது இந்தத் திட்டம். இந்த உண்மையை முன் வைத்து நிதி நிறுவனங்களிடம் இருந்து திட்டத்திற்குத் தேவையான மாநகராட்சியின் பங்குத் தொகையான 21 கோடி ரூபாயைக் கடனாகப் பெற முடியும். இந்தக் கடனையும், தமிழ்நாடு அரசிடம் இருந்து கிடைக்கவிருக்கும் வட்டியில்லாக் கடனான 14 கோடி ரூபாயையும் திட்டம் தொடங்கிய வெகு சில வருடங்களுக்குள்ளாகவே அடைத்துவிட முடியும். இதுதான் இன்றைய உண்மை நிலை.

இருந்தாலும் குப்பைத் திட்டத்திற்குப் பணம் இல்லை என்கிறீர்கள். திட்டத்தை நடத்த வேண்டும் என்றால் மக்களின் மீது குப்பை வரியை போடுவதைத் தவிர வேறு வழி இல்லை என்கிறீர்கள். உங்களின் இந்த உண்மைக்கு முரணான வாதத்தையும், செயல்பாட்டையும் மக்கள் எப்படிப் புரிந்து கொள்வார்கள்?

நகரக் குப்பையை சொந்தமாக்கிக் கொள்ளப்போகும் முதலாளியை தேர்ந்தெடுக்க உங்கள் சார்பாக இயங்கும் ஐ.எல்.எஃப்.எஸ். கந்துவட்டிக் கம்பெனி ஆகஸ்டு 6 ஆம் தேதி யாரை தேர்ந்தெடுத்தது? இப்போது திடீரென்று ஆகஸ்டு 25 ஆம் தேதிக்குள் உலக டெண்டர் விடப்படும் என்கிறீர்கள்! திரை மறைவில் என்னதான் நடக்கிறது? இதுபோன்ற ரகசிய நடவடிக்கைகளை மக்கள் எப்படி ஏற்றுக் கொள்வார்கள்? சிந்தித்தீர்களா?

குப்பையை அடுத்து நகரத்தின் தண்ணீரைக் கையில் எடுத்திருக்கிறீர்கள். பில்லூர் இரண்டாம் கட்டத் திட்டத்திற்கு 113.74 கோடி ரூபாய் தேவை. மத்திய அரசு 56.87 கோடி ரூபாயை மானியமாகவும், மாநில அரசு 22.748 கோடி ரூபாயை வட்டியில்லாக் கடனாகவும் கொடுக்கவிருக்கின்றன. மாநகராட்சி தன் பங்காக 34.122 கோடி ரூபாயை அளிக்க வேண்டும். இந்த அளவு தொகை மாநகராட்சியிடம் இல்லை என்பதால் இந்தத் திட்டத்திலும் குப்பைத் திட்டத்தைப் போலவே சர்வதேச முதலாளிமார்களை அழைக்க வேண்டும் என்றும் கூறி வருகிறீர்கள். விரைவில் இதற்கான சர்வதேச டெண்டரை அறிவிக்கப்போவதாகக் கூறி இருக்கிறீர்கள்.

**கோவையின் தண்ணீர்க் கட்டுமானங்களால் வருடத்திற்கு சுமார் 40-45 கோடி ரூபாயை லாபமாகக் கொடுக்க முடியும் என்பதை ஆதாரப் பூர்வமாக நிரூபிக்கும் கட்டுரையை இந்த இதழில் வெளியிட்டிருக்கிறோம். பில்லூர் இரண்டாம் திட்டத்தில் தனியார் முதலாளிகளை நுழைய விடுவதன் மூலமாக இந்த லாபத்தில் சுமார் 29%-ஐ அவர்களுக்குப் பங்குப் பணமாக வருடா வருடம் கொடுக்க வேண்டி வரும். அதாவது வருடத்திற்கு சுமார் 11-13 கோடி ரூபாயை அவர்கள் லாபமாக ஏப்பம் விடுவார்கள். அவர்கள் முதலீடு செய்யப்போகும் 34 கோடி ரூபாயை பில்லூர் இரண்டாம் திட்டம் நான்கு வருடங்களுக்குள்ளாகவே திருப்பிக் கொடுத்து விடும். 20 வருடங்களுக்கு திட்டத்தை அனுபவிக்கும் உரிமையை அவர்களுக்கு நீங்கள் தருவீர்களேயானால் முதல் நான்கு வருடங்களுக்குப் பிறகு அடுத்த 16 வருடங்களில் கோவை மக்களின் சுமார் 175 - 200 கோடி ரூபாயை அவர்களின் தொப்பை விழுங்கி ஏப்பம் விட்டிருக்கும்!**

தனியார் கம்பெனிகளை நுழைய விட்டால் என்னென்ன பிரச்சினைகளை நாம் சந்திக்க வேண்டியிருக்கும் என்பதற்கு திருப்பூர் நகரின் மூன்றாவது தண்ணீர்த் திட்டம் ஒரு சிறந்த எடுத்துக் காட்டு. L&T நிறுவனத்தால் 1998 ஆம் ஆண்டு நமது ஆத்துப்பாலம் களவாடப்பட்டது. இதற்குப் பிறகும் வெளிப்படையான விவாதமின்றி இதுபோன்ற திட்டங்களை நடைமுறைப்படுத்த முயலும் உங்கள் நடவடிக்கையை எவர்தான் ஏற்றுக் கொள்வார்கள்? **தனியாரோடு ஒப்பந்தம் செய்து கொண்டால் அடுத்த 20-30 வருடங்களுக்கு அவர்களை ஒன்றும் செய்வதற்கில்லை என்பது நம் கடந்த கால அனுபவமல்லவா?** தென் அமெரிக்காவில் உள்ள பொலீவியா நாட்டின் கோச்சபாம்பா நகரில் சொல்ல முடியாத அளவுக்கு அட்டகாசம் செய்த அமெரிக்க நிறுவனம் ஒன்றை வெளியேற்ற அந் நகர மக்கள் பட்ட துன்பம் உலகறிந்த ஒன்று.

இதையெல்லாம் அறிந்த பிறகும் நகர மக்கள் உங்களை ஏற்றுக்கொள்வார்கள் என்று இன்னும் நம்புகிறீர்களா?

எனவேதான் உங்களின் இன்றைய நடவடிக்கைகளில் நிதானம் தேவை என்று நாங்கள் கோருகிறோம். நாங்கள் திட்டத்திற்கு எதிரானவர்கள் அல்ல. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நீங்கள் சர்வதேச வட்டி நிறுவனங்களின் சூழ்ச்சி வலையிலும், அதிகாரிகள் சிலரின் அரைவேக்காட்டு ஆலோசனைகளிலும் சிக்கிக் கொள்ளக் கூடாது என்பதுவே எங்களின் ஆவல்.

திட்டத்தை நடைமுறைப்படுத்துவது குறித்து மீண்டும் ஒருமுறை சிந்தித்து செயல்படுவீர்களா? நகர மக்களுடன் விவாதித்த பின்னரே திட்டத்தை முன்னெடுப்போம் என்ற ஆரோக்கியமான அறிக்கையை உடனடியாக வெளியிடுவீர்களா?

●



### *நொய்யல் ஆத்துப்பாலத்தைக் கொள்ளையடித்த L&T கும்பலின் கொள்ளைக் கணக்கும், நாம் கற்க வேண்டிய பாடமும்*

◆ **அரைப் பாலத்தைக் கட்ட செலவான பணம்** : ரூ.3 கோடி

◆ **L&T கும்பலுக்கு அரசால் கொடுக்கப்பட்ட போனஸ்**: ஏற்கனவே கோவை மக்கள் உபயோகித்துவந்த மற்றொரு அரைப் பாலம்

◆ **கோவை மக்களிடம் இருந்து கப்பம் வசூலிக்கத் துவங்கிய நாள்**: 12 டிசம்பர் 1998

◆ **“கப்ப வசூல் உரிமை” முடியும் ஆண்டு** : 2018

◆ **2004-2005 ஆம் ஆண்டில் கோவை மக்கள் கட்டிய கப்பம்** : ரூ.9.414 கோடி

**வரி, முதலீடு மட்டும் வட்டி போக L&T கும்பலுக்குக் கிடைத்த லாபம்:** ரூ.3.018 கோடி

◆ **2005-2006 ஆம் ஆண்டில் கோவை மக்கள் கட்டிய கப்பம்** : ரூ.12.27 கோடி

*(2007-2008 ஆம் ஆண்டுக்கான கோவை மாநகராட்சியின் ஒட்டுமொத்த வருவாயில் இது 12.7% தொகை என்பதை மனதில் கொள்க)*

**வரி, முதலீடு மற்றும் வட்டி போக L&T கும்பலுக்குக் கிடைத்த லாபம்:** ரூ.5.814 கோடி

◆ **20 வருடங்களில் கோவை மக்கள் கட்ட வேண்டிய மொத்தக் கப்பம்** : சுமார் 600 கோடி

**வரி, முதலீடு மற்றும் வட்டி போக L&T கும்பலுக்குக் கிடைக்க இருக்கும் லாபம்:** ரூ. 400 கோடி

◆ **நீதி**: L&T -யை எதிர்த்து உள்ளூர் நீதிமன்றங்களிலேயே மக்களால் ஜெயிக்க முடியவில்லை. ஆனால் இன்று ஜவகர் திட்டத்தின் மூலம் கோவையைக் கையகப் படுத்த வருவதோ அந்நிய நிறுவனங்கள். எதிர்காலத்தில் அவற்றின் செயல்பாடுகளால் மக்கள் அல்லல் படுவார்களேயானால் எவ்வளவு முயற்சி செய்தாலும் அவர்களை நகரை விட்டு வெளியேற்ற முடியாது. மத்திய மாநில அரசுகள் நினைத்தால் கூட அவர்களை ஒப்பந்த காலம் முடியும் வரை வெளியேற்ற முடியாது. அவ்வாறு வெளியேற்றினால் உலக வர்த்தக நிறுவனத்தின் கடும் அச்சுறுத்தல்களுக்கு நம் நாடு உள்ளாக வேண்டி வரும்.

எனவேதான் இந்தக் கம்பெனி களுடன் ஒப்பந்தம் செய்து ஆயிரக்கணக்கான கோடி ரூபாயையும், நிம்மதியையும் இழந்து நாம் சீரழிவதைவிட இந்தத் திட்டங்களை நம் மாநகராட்சியே எடுத்து நடத்த முடியும். திட்டங்களின் மூலம் கிடைக்கும் லாபத்தை எதிர்கால நகர மேம்பாட்டுக்கு உபயோகப் படுத்துவதற்கான வாய்ப்பு உருவாகும்.

## ஐ.எல்.எஃப்.எஸ். கந்துவட்டித் தரகனால் கறைபடிந்துபோன திருப்பூர் வரலாறு! கவலை ஏதுமின்றித் தரகனை வரவேற்கும் கோவை மாநகராட்சி!

**உ**லகப் பின்னலாடை வரைபடத்தில் திருப்பூர் முக்கிய இடத்தை வகிக்கிறது.இந்தியாவில் இருந்து ஏற்றுமதியாகும் மொத்த பின்னலாடைகளில் 90% இந்த நகரத்தில்தான் உற்பத்தியாகின்றன. பல்வேறு நாடுகளின் பின்னலாடை முதலாளிகள் 1980-களின் பிற்பகுதி தொடக்கம் அந் நகரத்திற்கு சர்வ சாதாரணமாக வந்து போய்க் கொண்டிருக்கிறார்கள்.

1960 வரையிலுமே வெறும் காடா துணியைத்தான் திருப்பூர் நெய்து கொண்டிருந்தது. பின்னலாடைத் தொழிலை 1980-களின்போது பெரிய அளவில் அந்த நகரம் கை பிடித்தது. வெளிநாடுகளுக்கான முதல் ஏற்றுமதி 1984 ஆம் ஆண்டில் கைகூடியது. அன்றிலிருந்து இன்றுவரை நடக்கும் செயல்பாடுகள் அந் நகரை உலகப் பின்னலாடைப் பசிக்குத் தீனி போடும் கருவியாக உருமாற்றியிருக்கின்றன.

சுமார் 900 சாயப் பட்டறைகளும், பனியன் கம்பெனிகளும் அந் நகரத்தில் இருக்கின்றன. சுமார் 3 லட்சம் மக்கள் அங்கு வசிக்கிறார்கள்.

மக்களின் குடிநீர்த் தேவையை பூர்த்தி செய்ய மேட்டுப் பாளையம் பவானி ஆற்றிலிருந்து குடிநீரைக் கொண்டுவரும் இரண்டு திட்டங்களை 1965 மற்றும் 1992 ஆண்டுகளின்போது தமிழ்நாடு அரசு நிறைவேற்றியது. நகரமும், சுற்றியுள்ள கிராமங்களும் இத் திட்டங்களின் மூலம் தினமும் 390 லட்சம் லிட்டர் தண்ணீரைப் பெறுகின்றன. சாயப்பட்டறைகளுக்குத் தேவையான தண்ணீரை அவினாசி, பல்லடம், அன்னூர், காங்கயம் போன்ற இடங்களில் இருந்து தினமும் 7-10 டிரிப் அடிக்கும் 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள 2000-3000 லாரிகள் விநியோகம் செய்து வந்தன. இதை நோட்டம் விட்ட வெள்ளை முதலாளிகளின் மனதில் பொறாமைத் தீ புகுந்து கொண்டது.

### USAID - இன் முற்றுகையும் வெற்றியும்

எவ்வளவு நாட்கள்தான் இவர்களிடம் பின்னலாடைகளை வாங்கிக் கொண்டிருப்பது? இனி அவர்கள் நமக்குப் பணத்தைத் தர என்னென்ன திட்டங்களைத் தீட்டலாம்? என்ற ரீதியில் அவர்கள் யோசிக்கத் தொடங்கியிருந்த காலம் அது. திருப்பூரை நோக்கி சாரை சாரையாக வரும் தண்ணீர் லாரிகளின் பிம்பம் அவர்களை அலைக்கழித்தது. பல இரவுகளைத் தூக்கமின்றிக் கழித்த அவர்கள் கடைசியில் தங்களின் ஆத்ம வழிகாட்டியான USAID நிறுவனத்திடம் சென்று தங்கள் கனவுகளை திருப்பூரின் தண்ணீர் லாரிகள் தொடர்ந்து முற்றுகையிட்டு வருவதை முறையிட்டார்கள். லாரிகளின் முற்றுகையை தகர்க்க USAID வரிந்து கட்டியது.

முதல் நடவடிக்கையாக இந்தியாவில் தனக்காகத் தரகு பார்க்கும் ஐ.எல்.எஃப்.எஸ். கந்துவட்டிக் கம்பெனியோடு அது கலந்து ஆலோசித்தது. இந்தத் திட்டத்தில் ஈடுபடத் தேவையான பங்குப் பணத்தை ஐ.எல்.எஃப்.எஸ்-ற்கு உலக வங்கியைக் கொண்டு வழங்க வைத்தது. ஆசிய வளர்ச்சி வங்கியை அடுத்ததாக அது சந்தித்தது. அதன் தனியார் வட்டி நிறுவனமான ADIQUA HOLDINGS - ன் மூலம் 27% பங்குப் பணத்தைத் திட்டத்தில் மூலதனம் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டது.

பின்னர் தங்கள் நாட்டிற்கும், தம் நட்பு நாடுகளுக்கும் பாடிகளையும், ஜட்டிகளையும் ஏற்றுமதி செய்துவரும் திருப்பூர் பனியன் முதலாளிகளை USAID குளிப்பாட்டியது. மெய் மறந்து போன "திருப்பூர் ஏற்றுமதியாளர் கூட்டமைப்பை" சேர்ந்த முதலாளிகள் தண்ணீர் லாரிகளை மறக்க பாஞ்சாலி சபதம் எடுத்தனர். துரியோதண லாரிகளைத் தொடாத தண்ணீர்தான் தமக்குத் தேவை என்று தமிழ்நாடு அரசிடம் அவர்கள் மேல் முறையீடு செய்தார்கள்.

வழக்கம் போல தன்னிடம் பணம் இல்லையே என்ற பல்லவியைப் பாடியது தமிழ்நாடு அரசு. "பணமா? உங்களிடமா? எங்களைக் காப்பாற்றும் கிருஷ்ண பரமாத்மா என்று உங்களை நீங்களே நினைத்துக் கொண்டால் எப்படி!" என்று முதலாளிகள் இழுத்தபோது உண்மையில் தமிழக அரசின் "பொதுப்" புத்திக்குப் புரியவில்லை. இருப்பினும், "தமிழ்நாடு நகர வளர்ச்சி நிதி"யை (TNUDF) தமிழக அரசுடன் கூட்டு சேர்ந்து அன்றைய காலகட்டத்தில் (1990-களின் ஆரம்பத்தில்) நடத்திக் கொண்டிருந்த உலக வங்கியின் அதிகாரிகள் "தனிப் புத்தியின் அவசியம்" பற்றி தமிழக அரசுக்குப் போதித்தார்கள். இதன் மூலம் அதன் மந்த மனதில் "தனி ஒளி தீபத்தைப்" பக்குவமாக ஏற்றுவதில் வெற்றியும் கண்டார்கள். "பணத்தைப் பற்றிக் கவலை வேண்டாம். ஐ.எல்.எஃப்.எஸ். கந்துத் தரகர்கள் அதைப் பார்த்துக் கொள்வார்கள்" என்ற நம்பிக்கையை அவர்கள் அதன் குழம்பிய மனதில் விதைத்தார்கள்.

1994 ஆம் ஆண்டு ஆகஸ்டு 25 ஆம் நாளன்று இந்த தீபத்தின் விளக்கொளியில் "பொது"வும் "தனி"யும் கலந்தன! கலந்த அந்த நிமிடத்தில் துரியோதணனின் மரண சாசனம் எழுதப்பட்டது!! பிறந்தது புதிய திருப்பூர் பகுதி வளர்ச்சி நிறுவனம்!!! "பனியன் ஏற்றுமதி பாஞ்சாலி"யின் சபத முடிவு நாள் குறிக்கப்பட்டது. ஆனால் அந்தோ! இதுகாறும் அமைதியாக அந்தப்புரத்தில் காலம் தள்ளி வந்த திருப்பூர் மக்களைப் பிடித்துக் கொண்டது பீடை.

தமிழ்நாடு அரசையே இதுகாறும் தர்மனாக நம்பி அந்தப்புற வாழ்க்கையை மேற்கொள்ள வந்த திருப்பூர் மக்களுக்கு அதிர்ச்சி காத்திருந்தது.

*இனி தர்மன் மட்டுல்ல! ஐ.எல்.எஃப்.எஸ். தரகனும் அந்தப்புரத்திற்குள் வருவான் - அடுத்த 30 வருடத்திற்கு!!!*

விழா தொடங்கியது. "புதிய திருப்பூர் வளர்ச்சி நிறுவனத்திற்கு" "சிறப்புக் காரியத்தை எடுத்துச் செல்லும் ஓடம்" என்ற பெயரைச் சூட்டி USAID பூரித்துப் போனது!

### திருப்பூர் நகரின் மூன்றாம் தண்ணீர் திட்டம்

திருப்பூர் பகுதி மக்களுக்குக் கூடுதல் தண்ணீர் வழங்குவதற்காக 1991 ஆண்டில் மூன்றாவது திருப்பூர் திட்ட அறிக்கையைத் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியப் பொறியாளர்கள் உருவாக்கியிருந்தார்கள். இந்த அறிக்கையை உலக வங்கியால் "தனி ஒளி அபின்" ஏற்றப்பட்டு சிறப்பு ஓடத்தில் உட்காரவைக்கப்பட்டிருந்த தமிழக அரசிடம் வெறும் 2 லட்ச ரூபாயைக் கொடுத்துவிட்டு ஐ.எல்.எஃப்.எஸ். கைப்பற்றிக் கொண்டது.

பவானி நதியும் காவேரியும் இணையும் இடத்தில் இருந்து திருப்பூர் நகருக்குத் தேவையான தண்ணீரை எடுப்பதே இந்தத் திட்டத்தின் அடிப்படை.

திட்டத்தை சிறப்பாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்றால் அதனை "உலகளவிலான டெண்டருக்கு" விடவேண்டும். அதற்கு ஈடு இணை எதுவும் இல்லை", என்ற USAID - இன் பஞ்சனை மந்திரத்தை ஐ.எல்.எஃப்.எஸ். தரகன் ஓதத் தொடங்கினான்!

திட்டத்திற்கான முதலீட்டைத் திரட்டுவதற்காக "தமிழ்நாடு தண்ணீர் முதலீட்டுக் கழகம்" ( TWIC - Tamil Nadu Water Investment Corporation) என்ற நிறுவனத்தை (உலக வங்கியின் "தனி ஒளி அபினி" ஆலோசனையினால் சுய புத்தியை சுத்தமாக இழந்து போன) தமிழ்நாடு அரசு அனிச்சையாகவே உருவாக்கியது. இந்தக் கழகத்தின் பகுதி மூலதனத்தைத் தமிழ்நாடு அரசும், மீதமுள்ள மூலதனத்தை IL&FS தரகுக்காரனும் கொடுப்பது என்று முடிவு செய்யப்பட்டது. அமெரிக்காவின் USAID நிறுவனம் இதற்காக சுமார் 112.5 கோடி ரூபாய்க்கான உத்தரவாதத்தைக் கொடுக்க முன் வந்ததை "என்னே உன் கொடையுள்ளம்!" என்று அனைத்துப் பத்திரிகைகளும் புகழுமாறு ஐ.எல்.எஃப்.எஸ். தரகுக்காரன் பார்த்துக் கொண்டான். *"கொடையைக் கொடுத்த அடுத்த விநாடியே" அமெரிக்காவின் பெக்டெல் நிறுவனத்தையும், வில்பர் ஸ்மித் நிறுவனத்தையும் திட்டத்திற்கான தொழில்நுட்ப மற்றும் நிர்வாக ஆலோசகர்களாக ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று USAID நிர்ப்பந்தம் செய்ததுதான் வேடிக்கை!*

திட்டத்தை இயக்குவதற்கும் நிர்வகிப்பதற்குமான உரிமை மகேந்திரா & மகேந்திரா நிறுவனத்தின் தலைமையிலான கூட்டணிக்குக் கொடுக்கப்பட்டது. மகேந்திரா என்றவுடன் "நம்ம சுதேசி" என்று நினைத்துவிட வேண்டாம்! இந்தக் கூட்டணியில் அமெரிக்காவின் பெக்டெல் நிறுவனமும், (கோவை ஆத்துப்பாலத்தை 1998 ஆம் ஆண்டில் கொள்ளையடித்த) L&T-EEC நிறுவனமும் பொறியியல், கட்டுமானப் பொருள் கொள்முதல் மற்றும் கட்டுமானத்திற்கான [Engineering, Procurement and Construction (EPC)] நிறுவனங்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டன. திட்டத்தை இயக்கும் பணி மகேந்திராவின் சார்பாக இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த United Utilities என்ற நிறுவனத்திடம் விடப்பட்டது.

**வெள்ளைக் கும்பினியரின் அதிரடி ஆட்டம்**

நாடகத்தின் முதல் காட்சியே அதிரடி ஆக்ஷனாக இருந்தது. காண்ட்ராக்டை எடுத்த மறுநிமிடமே பெக்டெல் நிறுவனம் அந்தப் பணியினை நம் நாட்டின் ஹிந்துஸ்தான் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் நிறுவனத்திடம் குறைந்த பணத்திற்கு சப்-காண்ட்ராக்ட் விட்டு விட்டு "நோகாமல்" கோடிகளை ஏப்பம் விட்டு கட கடவென்று சிரித்தது. *( ஹிந்துஸ்தான் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் நிறுவனத்தால் திட்டத்தின் கட்டுமானப் பணிகளை முழுமையாக செய்து முடிக்க இயலவில்லை. இதன் காரணம் திட்டத்தை முடித்துக்கொடுக்க வேண்டுமென்று தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தை NTADCL கேட்டுக் கொண்டது. கடைசியில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் உதவியைக் கொண்டே இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டது.)*

ஐ.எல்.எஃப்.எஸ். கந்துத் தரகனால் திட்டத்திற்குள் நுழைக்கப்பட்ட வெள்ளைக் கம்பெனிகள் செய்த அட்டகாசம் அத்தோடு நின்றுவிடவில்லை.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் இந்தத் திட்டத்திற்கு சுமார் 300 கோடி ரூபாய் தேவை என்று 1992 ஆம் ஆண்டில் மதிப்பிட்டிருந்தது. சர்வதேச டெண்டரில் ஒப்பந்தத்தை எடுத்த மறு நிமிடமே அமெரிக்காவின் பெக்டெல் நிறுவனமும், இங்கிலாந்தின் United Utilities நிறுவனமும் திட்டத்திற்குள் மூன்று சிறிய மாற்றங்களை புகுத்தின. ( இந்த சிறிய ஆலோசனைக்காக கோடி ரூபாய்க்கான பில்லை அனுப்ப அவை மறந்துவிடவில்லை.) மாற்றங்கள் செய்யப்பட்ட புதிய திட்ட அறிக்கையின் அடிப்படையில் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்றால் 600 கோடி ரூபாய் கூட போதாது என்று அவை அதிரடியாக அறிவித்தன. மேற்கூறிய மூன்று மாற்றங்களுக்கு சுமார் 100 கோடி ரூபாய் மட்டுமே அதிகமாக செலவாகும் என்ற சூழ்நிலையில் திட்டத்திற்கான மதிப்பீடு 400 கோடி ரூபாய்க்கும் சற்றுக் கூடுதலாகத்தானே இருந்திருக்க வேண்டும்? இருப்பினும் அறிவியல் தர்க்கங்களுக்கெல்லாம் அவை செவி சாய்க்கும் மனோநிலையில் இருந்தால்தானே?

**மயக்கத்தில் முளித்த தமிழ்நாடு அரசு**

600 கோடி ரூபாய் அறிவிப்பில் அனைவரும் கிறங்கிப் போயிருந்த வேளையில் மேலும் ஒரு அணுகுண்டை அந்நிறுவனங்கள் வெடித்தன. நகரத்தின் பாதாள சாக்கடைத் திட்டத்தோடு இந்தத் திட்டத்தைச் சேர்க்க வேண்டும் என்பதுதான் அந்த "அணுகுண்டு ஆலோசனை"! 300 கோடி 600 கோடியாக மாறி கடைசியில் 1023 கோடியாகப் பெருத்துப் போனது.

"பணத்தை நாங்களே "பைனான்ஸ்" செய்து கொள்கிறோம். ஆனால் அதற்கு முன் ஒரே ஒரு பத்திரத்தில் மட்டும் நீங்கள் கையெழுத்திட வேண்டும்" என்று தமிழ்நாடு அரசிடம் அவர்கள் கூறிய போது அவர்கள் வெடித்த அதிர்வேட்டுகளிலும், உலக வங்கி அளித்திட்ட ( TNUDF என்ற ) அபினியிலும் கிறங்கிக் கிடந்த தமிழ்நாடு அரசால் "முடியாது" என்று சொல்ல இயலவில்லை!

**சர்வதேச தண்ணீர் கம்பெனியின் (International Water Limited - IWL) உதயம்**

கொடிகாத்த குமரன் வீழ்ந்த திருப்பூர் நகரின் அதே வீதியில்தான் அவர்களின் எதிர்பாராக் காதல் மலர்ந்தது!

USAID - ஆனது தனது செல்லப்பிள்ளையான பெக்டெல் நிறுவனத்தை 1994 ஆம் ஆண்டின்போது திருப்பூர் நகரின் மூன்றாம் தண்ணீர்த் திட்டத்தில் பங்கேற்பதற்காக அழைத்து வந்திருந்தது. அதே சமயத்தில் திட்டம் பற்றி ஐ.எல்.எஃப்.எஸ் மூலம் அறிந்துகொண்ட நம்மூர் "டிராக்டர்" கம்பெனியான மகேந்திரா-விற்கும் நாக்கில் எச்சில் ஊறியது. தண்ணீர் பற்றி ஒன்றும் அறியாத அது திட்டத்தில் தனக்கு உதவ முடியுமா என்று இங்கிலாந்து நாட்டின் தண்ணீர்க் கட்டுமான நிறுவனமான "யுனைட்டட் யூட்டிலிட்டீஸ்" நிறுவனத்திடம் விண்ணப்பம் வைத்தது. விண்ணப்பம் தந்த இன்ப அதிர்ச்சி முடிவதற்குள்ளாகவே இவ்விரண்டு நிறுவனங்களும் இணைந்து "மகேந்திரா யூட்டிலிட்டீஸ்" என்ற புதிய நிறுவனத்தை உருவாக்கின.

திட்டம் செயல்பட ஆரம்பித்த முதல் சில மாதங்களில் பெக்டெல்லும், யுனைட்டட் யூட்டிலிட்டீஸ் நிறுவனமும் நெருங்கிப் பழகின. பழக்கம் பரவச நிலையை அடைந்தபோது திருமணம் நிச்சயிக்கப்பட்டது. திருப்பூர் நகர வீதிகளில் மலர்ந்த அவர்களின் காதல் 1996 ஆம் ஆண்டில் திருமணத்தில் முடிந்தபோது தமக்கு வைத்துக் கொண்ட பெயர்தான் International Water Limited என்ற IWL!

## திட்டமும் விளைவுகளும்

2005 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் இருந்து இந்தத் திட்டத்தின் மூலம் திருப்பூர் நகருக்குத் தண்ணீர் கிடைக்கத் தொடங்கியது. 1850 லட்சம் தண்ணீருக்கான திட்டம் இது. 1150 லட்சம் லிட்டர் தண்ணீர் சாயப்பட்டறை மற்றும் பனியன் கம்பெனிகளுக்கும், 337 லட்சம் லிட்டர் தண்ணீர் திருப்பூர் நகராட்சிக்கும் (4.5 லட்சம் மக்கள்), 363 லிட்டர் தண்ணீர் சுற்றியுள்ள 192 கிராமங்களுக்கும் (4.5 லட்சம் மக்கள்) கொடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

தண்ணீர்த் திட்டத்தில் இருந்து வரும் வருமானத்தைக் கொண்டு பாதாள சாக்கடைத் திட்டத்தின் மொத்தத் தொகையில் 150 கோடி ரூபாயைக் கழிப்பதுவும், தொழிற்சாலைகளுக்கு வழங்கும் தண்ணீரின் கட்டணத்தைக் கூட்டி வைப்பதன் மூலம் 9 லட்சம் மக்களுக்கு வழங்கும் 700 லட்சம் லிட்டர் தண்ணீரின் விலையைக் குறைப்பதுவும் திட்டத்தின் முக்கிய அம்சங்களாகும்.

தொழிலகங்களுக்கு 1000 லிட்டருக்கு 45 ரூபாய் என்றும், திருப்பூர் நகராட்சி எல்லைக்குள் வசிக்கும் மக்களுக்கு 1000 லிட்டருக்கு 5 ரூபாய் என்றும், சுற்றியுள்ள 192 கிராமங்களில் வசிக்கும் மக்களுக்கு 1000 லிட்டருக்கு 3.50 ரூபாய் என்றும் கட்டணம் நிர்ணயிக்கப் பட்டது.

இந்தக் கட்டணங்களை வசூலிப்பதில் பிரச்சினைகள் பல உருவாயின. 1000 லிட்டருக்கு 45 ரூபாய் கொடுத்து தண்ணீரை வாங்க தொழிலகங்கள் முன்வரவில்லை. லாரிகளின் மூலம் சுற்றுக் கிராமங்களில் இருந்து கொண்டுவரப்படும் தண்ணீர் 1000 லிட்டருக்கு 35 ரூபாய்க்குக் கிடைப்பதால் 10 ரூபாய் அதிகம் கொடுத்து தண்ணீரை வாங்க எவர் முன் வருவர்? வேறு வழியின்றி தண்ணீரின் விலையை 37 ரூபாய்க்குக் குறைக்க வேண்டி வந்தது. தண்ணீரின் விலையைக் குறைத்த பின்னரும்கூட அதை வாங்க பலர் முன்வராத சூழ்நிலையே உள்ளது.

ஆக தொழிலகங்களுக்காக ஒதுக்கப்பட்ட 1150 லட்சம் லிட்டர் தண்ணீரை முழுமையாக வாங்க தொழிலகங்கள் முன் வராததாலும், அப்படியே அந்தத் தண்ணீரை வாங்கும் தொழிலகங்களுக்கு முதலில் நிர்ணயிக்கப்பட்ட விலையைவிடக் குறைந்த விலைக்குக் கொடுக்கப்பட வேண்டிய சூழ்நிலை இருப்பதாலும் திருப்பூர் நகர மக்களுக்கும், சுற்றியுள்ள கிராம மக்களுக்கும் குறைந்த விலையில் எப்படித் தண்ணீரை வழங்குவது என்ற யோசனையில் ஐ.எல்.எஃப்.எஸ். தலைமையிலான "புதிய திருப்பூர் பகுதி வளர்ச்சி நிறுவனம்" இருக்கிறது. இதன் காரணம் திருப்பூர் நகர மக்களுக்கும், கிராம மக்களுக்கும் கொடுக்க வேண்டிய 700 லட்சம் லிட்டர் தண்ணீரைக் கொடுக்காமல் அதில் ஒரு பகுதியை மட்டுமே அளித்து வருகிறது.

### பிலிப்பைன்சில் தேன் நிலவு! பொலீவியாவில் வாண வேடிக்கை!!

"பிலிப்பைன்ஸ் நாட்டின் தலைநகரான மணிலாவின் பொதுத்துறை தண்ணீர் நிறுவனத்தை தனியாருக்கு விற்றேயாகவேண்டும். இல்லையேல் நகர மக்களுக்கு இனி ஒழுங்காகத் தண்ணீர் வழங்க முடியாது" என்ற உலக வங்கியின் வாதத்தை 1994 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் அந்த நாட்டின் அரசு ஏற்றுக் கொண்டது.

1997 ஆம் ஆண்டில் நடந்த சர்வதேச டெண்டரில் IWL தன் முதல் வெற்றியை ஈட்டியது. பணக்காரர்கள் நிறைந்த கிழக்கு மணிலாவில் அது தண்ணீர்க்கட்டணத்தைக் கூட்டியபோது எவரும் எதிர்க்கவில்லை. லாபம் தலையைக் கிறங்கச் செய்ய உலகம் முழுதும் தன் தண்ணீர் வியாபாரத்தை விரிக்க அது கனவு கண்டது.

உலக வங்கி 1998 ஆம் ஆண்டில் தென் அமெரிக்க நாடான பொலீவியாவின் பொதுத்துறைத் தண்ணீர் நிறுவனங்களைத் தனியாருக்குத் தாரை வார்க்க வேண்டும் என்று மிரட்டியது. மிரட்டலுக்குப் பணிந்த பொலீவிய அரசு அந்நாட்டின் கொச்சபாம்பா நகரத்தின் பொதுத்துறை தண்ணீர் நிறுவனத்தை "சர்வதேச டெண்டரின்" மூலம் தனியார் முதலாளிகளுக்கு விற்க சம்மதித்தது. உள்ளூர் முதலாளிகளோடு கூட்டு சேர்ந்து மணிலாவில் வெற்றி ஈட்டியதைப் போலவே பொலீவியாவின் உள்ளூர் முதலாளிகளோடு சேர்ந்து Aguas de Tunari என்ற புதிய நிறுவனத்தை IWL உருவாக்கியது. 1999 ஆம் ஆண்டில் வெற்றியையும் ஈட்டியது.

நிறுவனம் தன் கைக்கு வந்ததும் கிழக்கு மணிலாவில் தண்ணீர் வரியைக் கூட்டியதைப் போலவே இங்கும் தண்ணீர் வரியை உடனடியாக உயர்த்தியது. நகரத்தின் மழை நீரும் தனக்குத்தான் சொந்தம் என்று கூறத் துணிந்தது! கொச்சபாம்பா நகர மக்கள் கிழக்கு மணிலா மக்களைப் போல பணக்காரர்கள் இல்லை என்பதால் கொதித்தெழுந்தார்கள்! எதிர்ப்பு கலகமாக மாறியது! நடந்த துப்பாக்கி சூட்டில் சிறுவன் ஒருவன் கொல்லப்பட்டான்! பதிலடியாக ஒரு ராணுவ அதிகாரியை மக்கள் சுட்டுக் கொன்றனர். கலகம் உக்கிரமடைந்ததன் விளைவாக அதனை அடக்க அவசர நிலையைப் பிறப்பிக்க வேண்டிய நிர்ப்பந்தம் உருவானது. Aguas de Tunari நிறுவனத்தின் அதிகாரிகளின் உயிருக்கு இனியும் தங்களால் பாதுகாப்பு கொடுக்க முயாது என்று காவல்துறை அறிவித்தது. நிறுவன அதிகாரிகள் உடனடியாக நகரை விட்டு ஓட்டம் பிடித்தார்கள். அதன் பிறகும் கூட நிலைமை கட்டுக்குள் வரவில்லை. 2000 ஆம் ஆண்டு மே மாதத் தொடக்கத்தில், வேறு வழியின்றி Aguas de Tunari - யுடன் தான் செய்துகொண்ட ரூ.900 கோடி தண்ணீர் ஒப்பந்தத்தை ரத்து செய்வதாக பொலீவிய அரசு அறிவித்தது.

பொலீவியாவைக் காலி செய்த Aguas de Tunari நிறுவனம் பொலீவிய அரசின் மீது உலக வர்த்தக நிறுவனத்தின் அங்கமான International Centre for Settlement of Investment Disputes அமைப்பில் 90 கோடி ரூபாயை நஷ்ட ஈடாகக் கேட்டு வழக்கு தொடர்ந்தது. உலகம் முழுவதும் இதை எதிர்த்து எதிர்ப்புக் குரல்கள் கிளம்பின. மிகச் சிறிய ஒரு தொகைக்காக உலகம் முழுவதும் தன் "நற் பெயர்" தொடர்ந்து களங்கமடைடைந்து வருவது குறித்து அது பதட்டம் கொண்டது. வேட்டையாட வேண்டிய மேலும் பல நாடுகளுக்குள் நுழைய சங்கடம் ஏதும் நேரக்கூடாது என்பதற்காக Aguas de Tunari, தான் International Centre for Settlement of Investment Disputes -இல் தொடர்ந்திருந்த வழக்கை 2006 ஆம் ஆண்டு ஜனவரி 16 ஆம் தேதியன்று வாபஸ் வாங்கிக் கொண்டது!

தவிர, தண்ணீர் சுவையற்று இருக்கிறது. தண்ணீரில் புழுக்கள் இல்லை என்றால் ஆச்சர்யப் படவேண்டும் என்று கூறும் அளவிற்குத் தண்ணீர் அசுத்தமானதாக இருக்கிறது.

இந்த காரணங்களால் திருப்பூர் பகுதியைச் சார்ந்த மக்கள் திட்டத்தை எதிர்த்துப் போர்க்கொடி தூக்கியிருக்கிறார்கள். இதன் விளைவே 2007 ஏப்ரல் இரண்டாம் வாரத்தில் தமிழ்நாடு சட்டசபையில் இதுகுறித்து கடுமையான விவாதம் உண்டானது.

சட்டசபையில் நடக்கும் விவாதத்தையோ, மக்களின் எதிர்ப்பையோ ஐ.எல்.எஃப்.எஸ். தரகன் கண்டுகொள்ளவே இல்லை. கண்டுகொள்ளப் போவதுமில்லை. காரணம் அவனுக்கு வழங்கப் பட்ட சட்டப் பாதுகாப்பு!

**சட்டப் பாதுகாப்பு - இனி ஐ.எல்.எஃப்.எஸ்.-தரகனின் அனுமதியின்றி புதிய தண்ணீத் திட்டங்கள் திருப்பூரில் வர முடியாது**

**அடுத்த 30 வருட காலத்தில் தண்ணீருக்குத் திருப்பூர் நகர மக்களோ அல்லது சுற்றியுள்ள கிராம மக்களோ பணம் கட்டத் தவறினால் அவர்களுக்கு வழங்க வேண்டிய தண்ணீரை விரும்பியோருக்கு விற்றுக் கொள்ளலாம் என்று தமிழக அரசு (ஐ.எல்.எஃப்.எஸ். தலைமையில் அமைந்த) "புதிய திருப்பூர் பகுதி வளர்ச்சி நிறுவனத்திற்குக்" கையெழுத்துப் போட்டுக் கொடுத்திருக்கிறது. பொது மக்கள் பயன்பாட்டுக்காக 700 லட்சம் லிட்டர் தண்ணீர் கொடுத்தால் போதும். ஒரு வேளை மக்களுக்கு அதிகத் தண்ணீர் தேவைப்பட்டால் கூட அதை வழங்க வேண்டிய சட்ட ரீதியான அவசியம் அந்த நிறுவனத்திற்குக் கிடையாது. (திருப்பூரில் பெருகும் மக்கள் தொகை, வேலைக்காக தினம் தினம் புதிதாக வந்து குடியேறும் மக்கள், அவர்களின் தேவைக்கு இன்றுபோல் இன்னும் 30 வருடங்களுக்கு 700 லட்சம் லிட்டர்தான்!) சாயப் பட்டறைகளுக்கு ஒதுக்கப்பட்டிருக்கும் நீரை அப்பட்டறைகள் முழுமையாக உபயோகிக்கவில்லை என்ற சூழ்நிலையால் மீந்து போகும் நீரைக்கூட, கூடுதல் தண்ணீர் தேவைப்படும் மக்களுக்குக் கொடுப்பதா வேண்டாமா என்பதை அந்த நிறுவனம்தான் முடிவு செய்யுமேயொழிய அரசால் ஒன்றும் செய்ய முடியாது.**

திட்டத்திற்காக அந்த நிறுவனம் முதலீடு செய்த பணம் அவர்கள் எதிர்பார்க்கும் லாபத்தோடு 30 வருடத்திற்குள் எடுத்து விட்டால் ஒப்பந்தம் அதோடு முடிந்து விடும். இல்லையேல் அந்தப் பணம் திரும்ப வசூலாகும் வரை திட்டத்தின் உரிமையாளராக அந்த நிறுவனமே இருக்கும்!

காவேரியில் இருந்து இன்று எடுத்துக் கொண்டிருக்கும் 1850 லட்சம் லிட்டர் தண்ணீருக்கும் மேலாக 2500 லட்சம் லிட்டர் தண்ணீர் வரை

## பெக்டெல் யார்?

அமெரிக்க நாட்டின் நம்பர் 1 பொறியியல் காண்ட்ராக்டர்.

2004 ஆம் ஆண்டில் 78,300 கோடி ரூபாயையும், 2005 ஆம் ஆண்டில் 81,450 கோடி ரூபாயையும் அந்த நிறுவனம் சம்பாதித்தது. (2007-08 ஆம் ஆண்டின் கோவை மாநகராட்சியின் ஒட்டுமொத்த வருட வருமானம் (மாநில அரசின் மாண்யத்தையும் சேர்த்து ) ரூ.125 கோடி. பெக்டெல்லின் 2005 ஆம் ஆண்டின் வருமானம் கோவை மாநகராட்சியின் தற்போதைய வருட வருமானத்தை விட 650 மடங்கு அதிகம்.)

பெக்டெல்லுக்கு மின்சாரத் துறையில் இருந்து 5%-ம், அமெரிக்க அரசுப் பணியில் இருந்து 35%-ம், பெட்ரோல் மற்றும் ரசாயணத் துறையில் இருந்து 18%-ம், கட்டுமானத் துறையில் இருந்து 29%-ம், இன்னபிற பணிகளில் இருந்து 12%-ம் கிடைக்கிறது.

20 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் சாதாரண ரயில் ரோடு காண்ட்ராக்டராக வாழ்வைத் தொடங்கிய பெக்டெல் இவ்வளவு பெரிய பகாசுர நிறுவனமாக மாறியது எப்படி?

### அமெரிக்க அரசிடம் உள்ள செல்வாக்கு

- இரண்டாம் உலகப் போரில் கப்பல் மற்றும் துறைமுகங்களைக் கட்டும் காண்ட்ராக்டை "கலிபோர்னியா கப்பல்கட்டும் கம்பெனியின்" உதவியுடன் பெக்டெல் எடுத்தது. போருக்குப் பின் "கலிபோர்னியா" கம்பெனியை விலைக்கு வாங்கிக் கொண்டது. அந்தக் கம்பெனியை விற்ற முதலாளி திரு.மெக்கோன் அவர்களுக்கு "அமெரிக்க அணுசக்தித் துறை"யின் தலைவர் பதவி காத்திருந்தது. 1953 ஆம் ஆண்டில் தனியார் துறை அணு மின் நிலையங்களைக் கட்ட வேண்டும் என்று அமெரிக்க ஜனாதிபதி கேட்டுக் கொண்டார். 1956 ஆம் ஆண்டு உலகின் இரண்டாவது வர்த்தக ரீதியான அணுஉலையைக் கட்டும் காண்ட்ராக்ட் பெக்டெல்லுக்குக் கிடைத்தது. 1961-இல் பணிமுடிவு பெற்ற பிறகு திரு.மெக்கோன் அமெரிக்காவின் உளவு ஸ்தாபனமான CIA வின் தலைவரானார்!

- 1974 ஆம் ஆண்டில் ஜனாதிபதி நிக்சன் அரசாங்கத்தில் நிதித் துறைத் தலைவராக இருந்த திரு.ஜார்ஜ்.பி.சுல்ட்ஸ் பதவி விலகினார். விலகிய சில நாட்களிலேயே பெக்டெல் நிறுவனத்தின் துணைத் தலைவராக பதவி ஏற்றார். 1982 ஆம் ஆண்டில் அவருக்கு ஜனாதிபதி ரீகனால் உள்துறைத் தலைவர் பதவி கொடுக்கப்பட்டபோது இந்தப் பதவியைத் துறந்தார். 1989 ஆம் ஆண்டில் பதவிக் காலம் முடிவடைந்தது. மீண்டும் பெக்டெல் நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர்களில் ஒருவராக சேர்ந்து கொண்டார்.

- 1981 ஆம் ஆண்டில் அமெரிக்காவின் முக்கிய வங்கியான டில்லான், ரீட் வங்கியின் கூடுதல் பங்குகளைத் தனதாக்கிக் கொண்டது. இந்த வங்கியின் தலைவராக இருந்த நிக்கோலாஸ் பிரேடி ஜனாதிபதி சீனியர் புஷ் அவர்களின் ஆத்ம நண்பர்.

- மேற்கு ஜெர்மனி, ஸ்வீடன் போன்ற நாடுகளில் அமெரிக்கத் தூதராகப் பணியாற்றிய திரு.சார்லஸ் ரெட்மேன் அமெரிக்க உளவு நிறுவனத்தைச் சேர்ந்தவர். கியூபா நாட்டின் தலைவர் பிடல் காஸ்ட்ரோ, சிலி நாட்டின் தலைவர் அலண்டே போன்றவர்களை தீர்த்துக் கட்ட நடந்த முயற்சிகளில் முக்கியப் பங்காற்றியவர். 1996 ஆம் ஆண்டில் அவர் அனைத்துப் பணியில் இருந்தும் ஓய்வு பெற்றார். உடனேயே பெக்டெல் அவரைத் தன் ஆலோசகராக சேர்த்துக் கொண்டது.

- 2003 ஏப்ரல் 9 ஆம் தேதி ஈராக்கின் தலைநகரம் அமெரிக்காவின் வசமாகியது. அமெரிக்க விமானங்களின் குண்டு வீச்சால் தகர்க்கப்பட்ட அந்நாட்டின் பொதுத்துறைக் கட்டுமானங்களை மீண்டும் உருவாக்குவதற்கான காண்ட்ராக்டை அளிக்கும் பணி USAID-இடம் ஒப்படைக்கப்பட்டது. அந்த நிறுவனம் தனக்கு செல்லமான ஆறு அமெரிக்கத் தனியார் நிறுவனங்களிடம் இந்தக் காண்ட்ராக்டை ஏப்ரல் 15 ஆம் தேதியன்று ஒப்படைத்தது. அவற்றில் முக்கியமானது பெக்டெல். முதல் கட்டமாக 4500 கோடி ரூபாய்க்கான பணியும், இரண்டாம் கட்டமாக 8000 கோடி ரூபாய்க்கான பணியும் பெக்டெல்லுக்கு அளிக்கப்பட்டது!

**இதுபோன்ற நிறுவனங்களுக்குக் கோவை மாநகராட்சி ஜவகர் திட்டத்தின் காண்ட்ராக்டை அளித்தால், எதிர்காலத்தில் பிரச்சினைகள் ஏதேனும் ஏற்படுமாயின் நம்மால் அவற்றை சமாளிக்க முடியுமா? அதற்கான சக்தி நம்மிடம் இருக்கிறதா?**

அந்த நிறுவனம் எடுத்துக் கொள்ளலாம். இந்தக் கூடுதல் நீரை எடுக்க அது தமிழ்நாடு அரசிடம் எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும். அவ்வாறு தெரிவித்த நாளில் இருந்து 60 நாட்களுக்குள் தமிழக அரசு இதற்கான அனுமதியை அளித்தாக வேண்டும். மறுப்பதற்கு இடமில்லை.

திருப்பூர் நகரத்திற்கும், அதைச் சுற்றியுள்ள பகுதிகளுக்கும் தண்ணீர் விநியோகம் செய்வதற்கான "பிரத்யேக உரிமையை" அடுத்த 30 வருடங்களுக்கு ஐ.எல்.எஃப்.எஸ்-இன் தலைமையில் இயங்கும் "புதிய திருப்பூர் பகுதி வளர்ச்சி நிறுவனத்திற்கு" தமிழக அரசுடன் செய்து கொண்டிருக்கும் ஒப்பந்தம் அளித்திருக்கிறது. இந்த காலகட்டத்தில் **மக்களுக்குக் கூடுதல் தண்ணீர் தேவைப்பட்டால் கூட புதிய தண்ணீர் திட்டங்கள் எதையும் திருப்பூர் நகராட்சியாலோ, தமிழ்நாடு அரசாலோ அந்த நிறுவனத்தின் சட்ட ரீதியான ஒப்புதல் இல்லாமல் தொடங்க முடியாது!**

குடிநீர்ப் பற்றாக்குறையால் வாடும் மக்கள் நிலத்தடி நீரை உபயோகிக்கலாம் என்றால் அது சாயப்பட்டறைகளின் கழிவுகளால் விஷமாகிக் கிடக்கிறது. விஷமாக்கிய சாயப்பட்டறைகளை எதிர்த்த மக்களின் வழக்குகள் நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் நிலையில் அந்தப் பட்டறைகளைத் தன்னிடமிருந்து கூடுதல் தண்ணீரை வாங்கிக் கொள்ளுமாறு புதிய திருப்பூர் பகுதி வளர்ச்சி நிறுவனம் இடைவிடாமல் நச்சரித்துக் கொண்டிருக்கிறது!

**"திருட்டுத்" தண்ணீர்**

வேறு வழியில்லாமல் தண்ணீரை தனியாரிடம் இருந்து குடத்திற்கு 2-4 ரூபாய்க்கு மக்கள் வாங்க வேண்டிய சூழல் உருவாகியிருக்கிறது. ஆனாலும் அதிலும் ஒரு சிக்கல்!

"புதிய திருப்பூர் பகுதி வளர்ச்சி நிறுவனத்தைத்" தவிர வேறு எவரும் திருப்பூர் பகுதியில் தண்ணீர் விநியோகத்தில் ஈடுபட முடியாது. **இன்று மக்களுக்குத் தண்ணீரை விற்றுவரும் தனியாரை எதிர்த்து அந்த நிறுவனம் நீதிமன்றத்திற்கு சென்றால் அவர்கள் தண்டிக்கப்படுவார்கள். இன்று அவர்கள் செய்து வருவது சட்ட ரீதியில் "திருட்டுத் தண்ணீர்" வியாபாரமே!**

என்ன செய்வது என்று இருதலைக் கொள்ளி எறும்பாக விழித்துக் கொண்டிருக்கிறார்கள் திருப்பூர் பகுதி மக்கள்! அவர்களின் இந்த நிலைமைக்குக் காரணமான ஐ.எல்.எஃப்.எஸ். கந்துவட்டித் தரகுக் கம்பெனியோ லாபக் கணக்கில் திளைத்துக் கொண்டிருக்கிறது!

**கோவை மாநகராட்சியின் சிவப்புக் கம்பள வரவேற்பு**

அப்படிப்பட்ட கம்பெனியை கோவை மாநகராட்சி தன் ஜவகர் நகரப் புனரமைப்புத் திட்டத்தை மேற்பார்வையிட சிவப்புக் கம்பளம் விரித்து அழைத்திருக்கிறது. ஜீலை 4 ஆம் தேதி மாநகராட்சியால் வெளியிடப்பட்ட குப்பைத் திட்டத்திற்கான "சர்வ தேச டெண்டர்" அந்தக் கம்பெனியால் எழுதப்பட்ட ஒன்றே!

1998 ஆம் ஆண்டில் ஆத்துப்பாலத்தை எல்&டி நிறுவனத்திடம் இழந்து இன்று அந்த நிறுவனத்திற்கு நித்தம் கப்பம் கட்டிக் கொண்டிருக்கிறோம். அந்த நிறுவனத்தின் அட்டகாசத்தை நம்மால் தேர்ந்தெடுக்கப்பட்ட எம்.எல்.ஏ., எம்.பி-மார்களால் கூடக் கட்டுப்படுத்த முடியவில்லை. நம் தமிழக அரசே கூட அந்த நிறுவனத்திற்கு நஷ்ட ஈடு வழங்க வேண்டிய சூழ்நிலை உருவானது! நம்முடைய கடந்த கால அனுபவம் இது. இருப்பினும் இதுபோன்ற கம்பெனிகளுக்கு நம் மாநகராட்சி இன்று சிவப்புக் கம்பள வரவேற்பை அளித்துக் கொண்டிருக்கிறது.

திருப்பூர் மக்களைப் பின்னியெடுக்கும் சர்வதேச வட்டிக் கும்பலுக்கு ஜவகர் திட்டத்தின் மூலம் நம் நகரத்தை இழக்கப் போகிறோமா? அல்லது நமக்குத் தேவையான சூழலை நாமே உருவாக்கிக் கொள்ளப் போகிறோமா?

ஆத்துப்பாலத்தை இழந்த நாம் இனியும் உறங்கிக் கிடக்கலாமா?

சிந்திக்க வேண்டிய நேரம் இது! ●



***நகர மேம்பாடு***

மக்களைத் தவிர
மற்றவருக்கே தெரியும்
மக்களின் தேவையும் தீர்வும்

***"மேம்பட்ட" தண்ணீர் - சில துளிகள்***

"தானிருக்கும் பாத்திரத்தின்
வடிவெடுக்கும் தண்ணீர்"
குளோபல் டெண்டர் முடிவெடுக்கும் -
ஆளவருகிறவனை, அதன் விலையை.

செம்புலப் பெயல் நீர் போலக் கலந்தன
எம் மண்ணை வளர்த்தும் ஆற்று நீரும்
மேலை நாட்டு நிறுவனப் பெயரும்.

அண்ணனுக்கு பெண்ணழைக்கப்போன ஊரில்
அம்மன் கோயில் திடல் வரைக்கும் வந்து
வரவேற்றார்கள்
அதிகாலை என்ற போதும்
தண்ணீரும் கருப்பட்டியும் தந்து.
கானல் கடந்து வந்தடைந்தவனை
சாப்பிடுங்க சித்தப்பா என்கிறாள் மகள்
எந்தப்பய மோண்ட தண்ணியோ
விலை கொடுத்து வாங்கி வந்து.

தண்ணீர் இறைக்கும்
இயந்திரங்கள் தயாரிப்பில்
தனித்துவம் பெற்ற **கோவை**யில்
சேந்தித் தரப்போகும்
தரகனின் விமானம் தரையிரங்கும்
இன்னும் சில நிமிடங்களில்.

கலங்கலாய் ஓடும் எம் ஆற்று நீரில்
கலந்து நாறுவது
எந்த நாட்டுக் கொடியில் மிளிரும்
வண்ணத்தின் எச்சம்?

## கோவை டீ ஸ்டால்

“என்னடா இப்படி சோகமா உக்காந்திருக்க?” என கேட்டபடி வந்தான் கிருஷ்ணன்.

“சோகமென்ன சோகம், சைக்கிள்ள போய் தண்ணி கொண்டு வந்தவனுக்குதான அந்த கஷ்டம் தெரியும்” - என்றான் பழனி.

“டேய், உங்க வூட்டுலதான் எந்த நேரத்திலையும் தண்ணி வருமுன்னு சொல்லுவியே, என்னடா ஆச்சு?”

“அடிக்கடி பைப் உடைஞ்சி போயிறுதாமாம், அப்புறம் பத்து நாளைக்கு நாந்தான் சைக்கிள்ள தண்ணி கொண்டுட்டு வரனும்”

“அலுத்துக்காத மாப்பிள, நடுவுல நடுவுல கஷ்டப்பட மாட்டியா, கோயம்புத்தூருலதான் நல்லதண்ணிக்கு பஞ்சமில்லாயாமாம், சென்னையில போயி பாரு, அப்படியே நம்மூர கோயில் கட்டி கும்பிடுவ”

“இங்க என்ன தண்ணிக்கு கஷ்டமா?, நம்ம ஊரு வாட்டர் போர்டு குழாய் போடுறப்ப ஒழுங்கா போட்டுருந்தா இந்த கஷ்டமெல்லாம் வந்திருக்குமா?

“அட, இப்ப வந்திருக்கிற காப்பரேசன் கமிசனர் சொல்ற மாதிரி எல்லாத்தையும் வெளிநாட்டுக்காரங்கிட்ட உட்டுட்டா ஒரு பிரச்சன இருக்காது, அது பாட்டுக்கு தண்ணி மானத்த பாத்து ஊத்துமில்ல” என்றவன் சத்தமாய் பாட ஆரம்பித்தான் “தண்ணி கருத்துருச்சு...தவள சத்தம் கேட்டிருச்சி”

“நல்ல சந்தோசமாத்தாண்டா இருக்குது, வெளிநாட்டுக் காரனுக்கும் அவங்கம்பெனிக்கும் நம்ம ஊரு மேலதான் எத்தன கரிசனம்? நாந்தான் எப்பவுமே சொல்லுவனே, கோயம்புத்தூருன்னா அது தனிதான்”

“ரொம்ப அளக்காதடா, பொள்ளாச்சியிலயும், திருப்பூருலயும் அவனுவ போட்ட பைப் என்ன உடயாம இருக்குதா இல்ல சைக்கிள்ள குடத்த எடுத்துகிட்டு மைல் கணக்கில நம்மாளுங்க அலையாம இருக்கிறாங்களா?”

“அலையிறத விடு, இப்படி உள்ள வந்துதான தமிழ்நாட்டு ஆத்து தண்ணிய பாட்டில்ல அடைச்சு வித்துப்போட்டானுங்க, அப்படியொன்னும் ஆகாதல்ல?”



டீ மாஸ்டர் காளி திரும்பிப் பார்த்தார், “ஏலேய், அவன் அரைகுறயால்லம் வாங்க மாட்டமுல, மொத்தமாத்தான் எழுதிக் கொடுக்கனும். அவங் கேக்கிற காசக் கொடுக்காம தண்ணி புடிச்சி பாரு, அவன் வச்ச ஆளுக ஊட்டுக்குள்ளேயெ வந்து அண்டாவோட தூக்கிகிட்டு போவப் போறாங்க”

கையில் சொம்புடன் டீ வாங்க வந்த அஞ்சாங்கிளாஸ் அரை டிரவுசர் சொம்பை இறுகப் பற்றிக் கொண்டே கவலையுடன் கேட்டது “அண்ணே, அவங்க லாபத்துக்கு நம்மால காசு கொடுக்க முடியாட்டி அண்டவெல்லாந் தூக்கிட்டு போயிருவாங்களா? எங்க வூட்டுல ஒண்ணுதாண்ணே இருக்குது”

“நீ கவலப்பட்டு ஒண்ணும் ஆவப்போவுறதில்ல தம்பி, நெரய கவுன்சிலர்ங்க அவங்களுக்கே ஒண்ணுத் தெரிய மாட்டேங்குதுன்னு புலம்பிட்டுருக்குறாங்க, இதுல நீ வேற”

“தெரியுமில்ல, அவங்க நெனக்கிற லாபமில்லாட்டி கொடுக்க வேண்டிய தண்ணியயே நிறுத்தி வைக்கலாமாம், நம்ம கவர்மெண்டு கூட கேக்க முடியாதாம். கோர்ட்ல போய் நின்னாலும் ஜெயிக்காதாம், எப்படியிருக்கு கத”

கத நல்லதான் இருக்குது, அதுல வர வேண்டியவங்களுக்கு வரப்போற காசுக் கணக்கும் நல்லதான் இருக்கும். நீயும் நானும் நல்லாயிருப்போமான்னுதான் கேள்வி”

(தொடரும்)

# பில்லூர் இரண்டாம் கட்டக் குடிநீர்த் திட்டத்தைத் தனியார் முதலாளிகளுக்கு விற்க வேண்டிய அவசியமில்லை

## கோவை நகரக் குடிநீர் பொருளாதாரம் - இன்றைய நிலை

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் தினமும் 1520 லட்சம் லிட்டர் தண்ணீரை சிறுவாணி மற்றும் பில்லூர் அணைகளில் இருந்து கோவை மாநகருக்காக இறைக்கின்றது. இருப்பினும் இதே அளவு நீர் கோவை மாநகராட்சிக்குக் கிடைப்பதில்லை.

| வீணாகும் நீரின் அளவு | | |
|---|---|---|
| நீரை சுத்திகரிக்கும்போது | 4% | 60.80 லட்சம் லிட்டர் |
| தண்ணீரைக் கடத்தும்போது | 4% | 60.80 லட்சம் லிட்டர் |
| விநியோகிக்கும்போது | 15% | 228 லட்சம் லிட்டர் |
| வீணாகும் நீரின் மொத்த அளவு | 23% | 350 லட்சம் லிட்டர் |
| இறுதியாக மாநகராட்சிக்குக் கிடைக்கும் நீரின் அளவு | 77% | 1170 லட்சம் லிட்டர் |
| | | *ஆதாரம்: CDP, Coimbatore* |

மாநகராட்சிக்குத் தினமும் கிடைக்கும் குடிநீரின் அளவு 1170 லட்சம் லிட்டர்தான். என்றாலும் கூட, நீரை சுத்திகரிக்கும்போது வீணாகும் நீரைத் தவிர (4%) மீதமுள்ள நீரின் மொத்த அளவிற்குமே (96%) மாநகராட்சி பணம் கட்ட வேண்டியிருக்கிறது. அதாவது சுமார் 1460 லட்சம் லிட்டர் தண்ணீருக்கான பணத்தைத் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு அது தினமும் கொடுக்க வேண்டி இருக்கிறது.

### மாநகராட்சியின் தண்ணீர் வருமானம்

### நகரத்தின் கட்டிடங்கள்

தண்ணீர் கட்டமைப்புகளுக்கான வரி சொத்து வரியுடன் சேர்த்தே வசூலிக்கப்பட்டு வருகிறது. தவிர, தண்ணீர்க் கட்டணம் என்பது தனியாகவும் வசூலிக்கப்படுகிறது.

2001 ஆம் ஆண்டின் கணக்கெடுப்பின்படி மாநகராட்சியின் எல்லைக்குள் மொத்தம் 2,24,687 கட்டிடங்கள் இருந்தன. இவற்றில் 2,10,000 கட்டிடங்கள் (93.5%) சொத்து வரிக்கு உட்பட்டவை. 6.5% கட்டிடங்கள் மட்டுமே சொத்து வரிக்கு அப்பாற்பட்டவை. (அட்டவணை 2)

சொத்துவரிக்கு உட்பட்ட கட்டிடங்களில் வெறும் 59% கட்டிடங்கள் மட்டுமே இன்றைய தேதியில் வரியைக் கட்டிக் கொண்டிருக்கின்றன. மீதமுள்ள 41% கட்டிடங்கள் வரியைப் பற்றி இதுவரை கவலைப்பட்டதில்லை. தண்ணீர் இணைப்பைப் பெற்றிருந்தாலும் இல்லாவிட்டாலும் சொத்துவரி வசூலிக்கப்பட வேண்டிய 2,10,000 கட்டிடங்கள் அனைத்துமே "தண்ணீர் கட்டமைப்பு வரியைக்" கட்ட வேண்டும். இன்றைய தேதியில் சொத்து வரியைக் கட்டிக் கொண்டிருக்கும் 1,24,151 கட்டிடங்கள் இந்த வரியினூடாகத் தண்ணீர் வரியைக் கட்டிக் கொண்டிருக்கின்றன.

மேற்கூறிய 2,10,000 கட்டிடங்களில் குடி தண்ணீர் இணைப்பைப் பெற்றிருக்கும் கட்டிடங்கள் வெறும் 99,615

| சொத்துவரியைக் கட்டும் கட்டிடங்களும், தொகையும் | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| எண் | சொத்து இனம் | சொத்து எண்ணிக்கை | சொத்து வரி கட்டும் கட்டிடங்களின் எண்ணிக்கை | கட்டுபவர்கள்-கட்டாதவர்கள் விழுக்காடு | வசூலிக்கப்பட வேண்டிய தொகை (லட்சங்களில்) | வசூலிக்கப்படும் தொகை (லட்சங்களில்) | வசூல் விழுக்காடு |
| 1 | வீடு | 1,87,399 | 1,10,847 | 65.16 | 2626.13 | 2337.86 | 89.02 |
| 2 | வியாபார நிறுவனங்கள் | 17,406 | 9,732 | 67.55 | 858.02 | 666.63 | 77.69 |
| 3 | தொழிற்சாலைகள் | 5,195 | 3572 | 84.38 | 78.09 | 49.50 | 63.33 |
| மொத்தம் | | 2,10,000 | 1,24,151 | -- | 3562.24 | 3053.99 | 85.73 |
| | | | | | | | *ஆதாரம்: MOA - Coimbatore* |

மட்டுமே. இந்தக் கட்டிடங்கள் மட்டுமே (தண்ணீர் வரியோடு சேர்த்து) தண்ணீர்க் கட்டணத்தையும் கட்டிக் கொண்டிருக்கின்றன.

சொத்துவரி வசூலிக்கப்பட வேண்டிய ஒட்டுமொத்தக் கட்டிடங்களில் வெறும் 47% கட்டிடங்களே குடி தண்ணீர் இணைப்பைப் பெற்றிருக்கின்றன என்பதை மேற்கூறிய தகவல் விளக்குகிறது. இந்தக் கட்டிடங்களே தண்ணீர்க் கட்டணத்தையும் அளித்துக் கொண்டிருக்கின்றன என்பதும் தெளிவு.

**வரவு:**

தண்ணீர்க் கட்டணத்தில் இருந்தும், தண்ணீர் வரியில் இருந்தும், லாரிகள் மூலம் தண்ணீரை விற்றதில் இருந்தும் 2000-2007 ஆம் வருடம் வரை கிடைத்த மொத்த வரவை அட்டவணை 3 முன்வைக்கிறது.

மேலும் புதிய குடிநீர் இணைப்புகளுக்கான வைப்புத் தொகை மூலமும், இணைப்புக் கட்டணம் மூலமும் 2005-06 மற்றும் 2006-07 ஆம் ஆண்டுகளில் மட்டுமே சுமார் 2 கோடி ரூபாய் கிடைத்தது.

ஆக 2000-07 என்ற 8 வருட காலகட்டத்தில் மாநகராட்சியின் ஒட்டுமொத்தக் குடி தண்ணீர் வருமானமானது (புதிய குடிநீர் இணைப்புகளுக்கான வைப்புத் தொகை, இணைப்புக் கட்டணம் தவிர்த்து ) சுமார் 174 கோடி ரூபாய் என்பதை அறிந்து கொள்ள முடிகிறது.

**செலவு:**

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்குக் கொடுக்க வேண்டிய பணம் தவிர தண்ணீர் விநியோகத்திற்காக 2000-2004 ஆம் ஆண்டு வரை மாநகராட்சி கீழ்கண்ட செலவுகளை செய்திருக்கிறது. (அட்டவணை 4)

தண்ணீர் விநியோகத்திற்காக மாநகராட்சி ஒவ்வொரு வருடமும் சராசரியாக சுமார் 5.5 கோடி ரூபாயை செலவு செய்ய வேண்டியிருக்கிறது என்பதை இந்த அட்டவணையில் இருந்து நாம் தெரிந்து கொள்கிறோம்.

| அட்டவணை 3 | |
|---|---|
| வரவு | |
| 2000 ஆம் ஆண்டில் இருந்து 2007 ஆம் ஆண்டு வரை தண்ணீர் கட்டணத்தில் இருந்து மாநகராட்சிக்குக் கிடைத்த வரவு | ரூ.67.5 கோடி |
| 2000 ஆம் ஆண்டில் இருந்து 2007 ஆம் ஆண்டு வரையிலும் (சொத்து வரியோடு சேர்த்து வசூலிக்கப்படும்) தண்ணீர் வரியில் இருந்து கிடைத்த வருமானம் | ரூ.103 கோடி |
| 2000 ஆம் ஆண்டில் இருந்து 2007 ஆம் ஆண்டு வரையிலும் லாரிகள் மூலம் தண்ணீர் விநியோகம் செய்ததில் இருந்து கிடைத்த வருமானம் | ரூ.3.5 கோடி |
| 2000 ஆம் ஆண்டில் இருந்து 2007 ஆம் ஆண்டு வரையிலும் கிடைத்த (புதிய குடிநீர் இணைப்புகளுக்கான வைப்புத் தொகை, இணைப்புக் கட்டணம் தவிர்த்து ) மொத்த வரவு | ரூ.174 கோடி |

| அட்டவணை 4 | | | | |
|---|---|---|---|---|
| செலவு | | | | |
| | 2000-01 | 2001-02 | 2002-03 | 2003-04 |
| *(கோடி ரூபாய்களில்)* | | | | |
| கட்டுமானம் | 3.1019 | 2.9464 | 2.9582 | 3.0616 |
| மின்சாரம் | 0.1502 | 0.3937 | 1.1462 | 0.5657 |
| வாகன பராமரிப்பு, பழுது நீக்கல் | 0.0501 | 0.0289 | 0.0334 | 0.0951 |
| இயந்திரங்கள் பராமரிப்பு, பழுது நீக்கல் | 0.056 | 0.3299 | 0.2645 | 0.1228 |
| இன்ன பிற செலவுகள் | 1.5617 | 2.1612 | 1.1147 | 0.8795 |
| மொத்தம் | 6.4816 | 5.8601 | 5.517 | 4.7247 |
| | | | | *ஆதாரம்: CDP* |

| அட்டவணை 5 | | |
|---|---|---|
| தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திடம் வாங்கும் குடிநீருக்கு மாநகராட்சி அளிக்க வேண்டிய பணம் (1000 லிட்டருக்கு ரூ.4.50 என்ற அடிப்படையில்) | | |
| நீரின் அளவு | தினமும் செலுத்த வேண்டிய தொகை (கோடி ரூபாயில்) | ஆண்டுதோறும் செலுத்த வேண்டிய தொகை (கோடி ரூபாயில்) |
| 146000 ஆயிரம் லிட்டர் (146000 X 4.5) | 0.0657 | 23.9805 |
| 2000-07 வரை உள்ள 8 வருடங்களுக்கான மொத்தத் தொகை | --- | 191.844 |

| அட்டவணை 6 | |
|---|---|
| 8 வருடங்களுக்கான (2000-2007) மொத்த செலவு | |
| தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்குக் கொடுக்க வேண்டியது | ரூ.192 கோடி |
| விநியோக செலவு | ரூ.44 கோடி |
| 2000-07 வரை உள்ள 8 வருடங்களுக்கான மொத்த செலவுத் தொகை | ரூ.236 கோடி |

| அட்டவணை 7 | |
|---|---|
| 8 வருடங்களில் (2000-07) ஏற்பட்ட மொத்த இழப்பு | |
| மொத்த வரவு | ரூ.174 கோடி |
| மொத்த செலவு | ரூ.236 + ரூ.40 (சிறுவாணி 2000-2007) = 276 கோடி |
| மொத்த இழப்பு | ரூ.102 கோடி |

ஆக 2000-2007 ஆம் ஆண்டு வரை இதற்கான செலவு சுமார் 44 கோடி ரூபாயாக (5.5X8) இருந்திருக்கலாம் என்று கூற முடியும். (அட்டவணை 4, 6)

சிறுவாணி அணையைப் பராமரிக்க ஆண்டுக்கு 5 கோடி ரூபாயை கேரள அரசிற்குக் கொடுக்க வேண்டியிருக்கிறது. 2000-07 ஆம் வருடத்திற்கான இந்தத் தொகை ரூ.40 கோடியாகும். (அட்டவணை 7)

ஆக 2000-2007 ஆம் ஆண்டு வரை தண்ணீரில் இருந்து கிடைத்த மொத்த வருவாயையும் கடனுக்காக அடைத்திருந்தாலே மீதம் 102 கோடி ரூபாய் (வருடத்திற்கு ரூ.12.75 கோடி ரூபாய்) துண்டு விழுந்திருக்கும் என்று தெரிகிறது. ( அட்டவணை 7)

ஆனால் இந்த இழப்பு குறித்து பதட்டப்பட வேண்டிய அவசியமில்லை. பக்கம் 14 இல் உள்ள 8, 9, 10 அட்டவணைகளில் கூறப்பட்டிருக்கும் நடவடிக்கைகளை கோவை மாநகராட்சி மேற்கொள்ளும் பட்சத்தில் இந்த இழப்பினை எளிதில் ஈடு செய்வதோடு மட்டுமல்லாமல், லாபத்தைக் கூட அடைய முடியும் என்று தெரிகிறது.

இந்த நடவடிக்கைகளின் மூலம் ஆண்டுக்கு சுமார் 37 கோடி ரூபாய் லாபம் கிடைக்கும். இந்தத் தொகையைக் கொண்டு 2000-2007 ஆம் ஆண்டுகளில் விழுந்த ஒட்டுமொத்தத் துண்டுத் தொகையான 102 கோடி ரூபாயை மூன்றே வருடங்களில் அடைத்து விட முடியும் என்று கூறலாம். (பார்க்க: பக்கம் 14 -அட்டவணை 8, 9 , 10)

**இதுதான் கோவை நகரத் தண்ணீர்ப் பொருளாதாரத்தின் இன்றைய நிலை.**

தண்ணீர் கட்டணத்தை 1000 லிட்டருக்கு ரூ.3.50 என்பதில் இருந்து ரூ.4.50-க்கு 23.07-2007 ஆம் தேதியன்று மாநகராட்சி உயர்த்தியிருக்கிறது. மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை கட்டணத்தை 10% உயர்த்துவது என்றும் தீர்மானிக்கப் பட்டிருக்கிறது. மேலும் தண்ணீர் இணைப்புக்குமான கட்டணமும் கூட்டப்பட்டிருக்கிறது.

இதன் மூலம் கிடைக்க வாய்ப்புள்ள கூடுதல் வருமானத்தை இனி பார்ப்போம்.

தற்போது உயர்த்தப்பட்டிருக்கும் தண்ணீர்க் கட்டணத்தின் மூலம் 2000-2007 ஆம் ஆண்டுகளில் தண்ணீரினால் ஏற்பட்ட இழப்பான சுமார் 102 கோடி ரூபாயை அடுத்த இரண்டு அல்லது மூன்று வருடங்களுக்குள் ஈடு செய்து விட முடியும் என்பதைத் தெளிவாகத் தெரிந்துகொள்ள முடிகிறது. (பார்க்க : பக்கம் 15 அட்டவணை - 11, 12) மேலும் தண்ணீர்க்கட்டணத்தைக் கூட்டாமல் இருந்தால் கூட, அனைத்துக் கட்டிடங்களுக்கும் சொத்துவரியை வசூலிப்பதன் மூலமும், தண்ணீர் இணைப்பைக் கொடுப்பதன் மூலமும் பெற வாய்ப்புள்ள லாபமான 37 கோடி ரூபாய் கூடுதல் வருமானத்தைக் கொண்டு 2000-2007 ஆம் ஆண்டு வரை ஏற்பட்ட 102 கோடி ரூபாய் இழப்பை அடுத்த 3 வருடங்களுக்குள் அடைத்துவிட முடியும் என்பது தெளிவு. இப்படிப்பட்ட சூழ்நிலையில்தான் பில்லூர் 2 ஆம் திட்டத்தை ஜவகர்லால் நேரு தேசிய நகரப் புனரமைப்புத் திட்டத்தின் மூலம் செயல்படுத்த மாநகராட்சி தயாராகி வருகிறது.

## பில்லூர் 2 ஆம் திட்டத்தில் தனியார்மயம் அவசியமில்லை

**பில்லூர் 2 ஆம் திட்டத்தினை ஏற்று நடத்துவதற்காக சர்வதேச தனியார் நிறுவனங்களை "உலக டெண்டர்" மூலம் அழைக்க வேண்டும் என்று ஆளும் கட்சியினர் வாதிடுகிறார்கள். எதிர்க் கட்சியினரும், மக்களும் திட்டத்தை சர்வதேசத் தனியார் நிறுவனங்களிடம் ஒப்படைக்கக் கூடாது என்று கூறி வருகிறார்கள். மாறாக,** இந்தப் புதிய திட்டத்தையும் பொதுத் துறை நிறுவனமான "தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திடமே" ஒப்படைக்க வேண்டும் என்று அவர்கள் வாதிடுகிறார்கள்.

**"ஜவகர்லால் நேரு தேசிய நகரப் புனரமைப்புத் திட்டத்தின் கீழ் மத்திய-மாநில அரசுகளின் 70% நிதியைப் பெற வேண்டும் என்றால் இந்தத் திட்டத்தின் கீழ் வரும் ஒவ்வொரு குறிப்பான திட்டத்தையும் நடத்த "சர்வதேச டெண்டர்" விட்டேயாக வேண்டும். இல்லாவிட்டால் அந்த நிதியைப் பெற முடியாது" என்று மாநகராட்சியின் ஆட்சியாளர்கள் கூறி வருகிறார்கள்.**

**ஆனால் இது உண்மைக்குப் புறம்பான தகவல் ஆகும். ஜவகர்லால் நேரு தேசிய நகரப் புனரமைப்புத் திட்டத்தின் கீழ் "சர்வதேச டெண்டர்" என்பது அத்தியாவசியமான ஒரு செயல் அல்ல.** "சர்வதேச டெண்டர்" குறித்து அந்தத் திட்டத்தின் அத்தியாவசிய ஷரத்துகள் பேசவே இல்லை என்பதுதான் உண்மை. (பார்க்க: கோவை மாநகராட்சி மத்திய அரசுடன் செய்து கொண்ட ஒப்பந்த அறிக்கை: www.kovaikural.wordpress.com)

தமிழ்நாடு அரசு கொடுக்கும் வட்டியில்லாக் கடனான 22.748 கோடியை அடுத்த 7 வருடங்களில் திருப்பி அடைக்க மாநகராட்சிக்கு வருடத்திற்கு 3.25 கோடி ரூபாய் தேவைப்படும். மேலும் தான் அளிக்க வேண்டிய பங்குப் பணமான 34.122 கோடி ரூபாய் தன்னிடம் இல்லை என்று மாநகராட்சி திரும்பத் திரும்பக் கூறிக் கொண்டிருக்கிறது. இந்தப் பணத்தைத் திரட்ட வேண்டும் என்றால் உலகம் முழுதும் உள்ள தனியார் முதலாளிகளை இதில் முதலீடு செய்ய அழைப்பதைத் தவிர வேறு வழியில்லை என்று அதிகாரிகள் தினமும் செய்தி அறிக்கை வெளியிட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

மாநகராட்சியிடம் கையிருப்பாக இத்தனைப் பணம் இல்லாமல் இருக்கலாம். இன்றைய தேதியில் மாநகராட்சியிடம் 34 கோடி ரூபாய் பங்குப் பணம் இல்லை என்ற காரணத்திற்காகவே அந்தப் பணத்தை முதலீடு செய்ய உலகத் தனியார் கம்பெனிகளை அழைப்பதில் நியாயம் எதுவும் இருக்க முடியாது. தன் பங்காகக் கொடுக்க

**தண்ணீர்க் கட்டணத்தை உயர்த்தாமல் 2000-2007 ஆம் ஆண்டுகளில் இழந்ததொகையை ஈடு செய்ய வேண்டுமென்றால் என்ன செய்ய வேண்டும்?**

| அட்டவணை 8 | | |
|---|---|---|
| **மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள்** | | |
| 1 | சொத்து வரியைக் கட்டாத 85,849 கட்டிடங்களிடம் வரியை வசூலிப்பதால் ஆண்டுதோறும் கிடைக்க வாய்ப்புள்ள கூடுதல் பணம் | சுமார் 15 கோடி ரூபாய் |
| 2 | சொத்துவரிக்கு உட்பட்ட ஆனால் தண்ணீர் இணைப்புகள் பெறாத 1,10,385 கட்டிடங்களுக்குப் புதிதாகத் தண்ணீர் இணைப்புகள் கொடுப்பதன் மூலம் ஆண்டுதோறும் கிடைக்க வாய்ப்புள்ள கூடுதல் தண்ணீர் கட்டணம் ( 1000 லிட்டருக்கு ரூ.3.50 என்ற அடிப்படையில்) | சுமார் 18 கோடி ரூபாய் |
| 3 | புதிய குடிநீர் இணைப்புகளுக்கான வைப்புத் தொகை மற்றும் இணைப்புக் கட்டணம் மூலமாக | குறைந்தது 2 கோடி ரூபாய் |
| இந்த நடவடிக்கைகளால் ஆண்டுதோறும் கூடுதலாகக் கிடைக்க வாய்ப்புள்ள மொத்தத் தொகை | | 35 கோடி ரூபாய் |

| அட்டவணை 9 | |
|---|---|
| 2007-08ஆம் ஆண்டின் ஒட்டுமொத்தத் தண்ணீர் வருமானம் (தண்ணீர் வரி + தண்ணீர்க் கட்டணம் ) | 38.5 கோடி ரூபாய் |
| அனைத்துக் கட்டிடங்களுக்கும் இணைப்புகளை வழங்குவதன் மூலமும், சொத்து வரி வசூலிப்பதன் மூலமும் கூடுதலாக கிடைக்க வாய்ப்புள்ள தொகை | 33 கோடி ரூபாய் |
| மொத்த வரவு | 71.5 கோடி ரூபாய் |

| அட்டவணை 10 | |
|---|---|
| 2007-2008 ஆம்ஆண்டில் வர வேண்டிய மொத்த வரவு | ரூ.71.5 கோடி (புதிய இணைப்புக் கட்டணம் நீங்கலாக) |
| நகரத்தின் தண்ணீருக்காக ஆகும் வருடாந்திர செலவு | ரூ.34.5 கோடி (24+5.5+5) |
| வருடத்திற்கான மொத்த லாபம் | ரூ.37 கோடி |

வேண்டிய 34.122 கோடி ரூபாயை நிதி நிறுவனங்களிடம் இருந்து குறைந்த காலக் கடனாக மாநகராட்சி பெற முடியும்.

அடுத்த ஒன்றிரண்டு வருடங்களில் புதிய இணைப்புகளைக் கொடுத்துத் தண்ணீர்க் கட்டணம் வசூலிப்பதன் மூலமும், சொத்துவரிக்கு உட்பட்ட அனைத்துக் கட்டிடங்களுக்கும் சொத்து வரியை வசூலிப்பதன் மூலமும், தண்ணீர்க் கட்டணத்தை 1000 லிட்டருக்கு 4.50 ரூபாயாக உயர்த்தியிருப்பதன் மூலமும் ஆண்டுக்கு 46.6 கோடி ரூபாய் லாபம் கிடைக்கும் என்று கணக்குகள் தெரிவிக்கின்றன.

| அட்டவணை 11 | | | |
|---|---|---|---|
| **தண்ணீர்க் கட்டண உயர்வினால் ஏற்பட்டிருக்கும் வாய்ப்பு** | | | |
| எண் | வருமானம் | 1000 லிட்டருக்கு 3.50 ரூபாய் என்ற வீதத்தில் | 1000 லிட்டருக்கு 4.50 ரூபாய் என்ற வீதத்தில் |
| 1 | 2007-08 தண்ணீர்க் கட்டணத்தால் கிடைக்கும் வருமானம் | 16 கோடி ரூபாய் | 20.6 கோடி ரூபாய் |
| 2 | சொத்துவரிக்கு உட்பட்ட ஆனால் தண்ணீர் இணைப்புகள் பெறாத 1,10,385 கட்டிடங்களுக்குப் புதிதாகத் தண்ணீர் இணைப்புகள் கொடுத்துக் கட்டணம் வசூலிப்பதன் மூலம் கிடைக்கும் வருமானம் | 18 கோடி ரூபாய் | 23 கோடி ரூபாய் |
| 3 | இன்றய தேதியில் சொத்து வரியைக் கட்டிக் கொண்டிருக்கும் 1,24,151 கட்டிடங்கள் கொடுக்கும் தண்ணீர் வரி (2007-08) | 22.5 கோடி ரூபாய் | 22.5 கோடி ரூபாய் |
| 4 | சொத்து வரியைக் கட்டாத 85,849 கட்டிடங்களிடம் வரியை வசூலிப்பதால் ஆண்டுதோறும் கிடைக்க வாய்ப்புள்ள கூடுதல் பணம் | 15 கோடி ரூபாய் | 15 கோடி ரூபாய் |
| வருடாந்திர மொத்தத் தண்ணீர் வருமானம் | | 71.5 கோடி ரூபாய் | 81.1 கோடி ரூபாய் |

| அட்டவணை 12 | | |
|---|---|---|
| வரவு- செலவு- லாபம் | 1000 லிட்டருக்கு 3.50 ரூபாய் என்ற வீதத்தில் | 1000 லிட்டருக்கு 4.50 ரூபாய் என்ற வீதத்தில் |
| வருடாந்திர மொத்தத் தண்ணீர் வருமானம் | 71.5 கோடி ரூபாய் | 81.1 கோடி ரூபாய் |
| தண்ணீருக்கான வருடாந்திர செலவுத் தொகை | 34.5 கோடி ரூபாய் | 34.5 கோடி ரூபாய் |
| ஆண்டுக்கான மொத்த லாபம் | 37 கோடி ரூபாய் | 46.6 கோடி ரூபாய் |

அடுத்த 18 மாதங்களுக்குள் திட்டத்தை நிறைவேற்றும் பொறியாளர் நிறுவனமாக இந்தத் துறையில் அனுபவம் மிக்க தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்துடன் ஒப்பந்தம் செய்து கொள்ள முடியும். மேலும் திட்டத்தை இயக்கவும், நிர்வகிக்கவுமான ஒப்பந்தத்தையும் இதற்காக கட்டணம் செலுத்தி அந்த நிறுவனத்தையே வைத்துக் கொள்ளவும் முடியும். இவ்வாறு செய்வதன் மூலம் திட்டத்தின் உரிமையாளராக மாநகராட்சி மாறும்.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் திட்டத்தைக் கட்டமைக்கும், நிர்வகிக்கும் நிறுவனமாக மட்டுமே இருக்கும். இதன் காரணமாக பில்லூர் 2 ஆம் திட்டத்திற்காக எடுக்கும் தண்ணீருக்கு 1000 லிட்டருக்கு 4.50 ரூபாய் என்று கொடுக்க வேண்டிய அவசியம் இருக்காது. தண்ணீரை சுத்திகரிக்கவும், தடவாளங்களைப் பழுது பார்ப்பதற்கும், நிர்வகிப்பதற்கும், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மேற்பார்வைக்கும் மட்டுமே செலவு செய்தால் போதுமானது. இந்த அடிப்படையில் பார்த்தால் 1000 லிட்டருக்கு பில்லூர் 1 ஆம் திட்டத்திற்கு ஆகும் செலவான 4.50 ரூபாய் தேவை இருக்காது. வெறும் 1-2 ரூபாய் போதும். ஒவ்வொரு 1000 லிட்டரிலும் சுமார் 2-3 ரூபாய் சேமிக்க முடியும்.

பில்லூர் 2 ஆம் திட்டத்தின் மூலம் நகரத்திற்கு 618.4 லட்சம் லிட்டர் தண்ணீர் பெறுவது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது. இதில் 23% தண்ணீர் வீணாவதற்கு வாய்ப்புள்ளது என்று வைத்துக் கொண்டால் மாநகராட்சிக்குக் கிடைக்கப் போவது 476.168 லட்சம் லிட்டர் தண்ணீரே. இந்தத் தண்ணீரை 1000 லிட்டருக்கு 2 ரூபாய் செலவளித்தால்கூட மாநகராட்சிக்கு

| அட்டவணை 13 | |
|---|---|
| **பில்லூர் 2 ஆம் திட்டத்திற்கான செலவுகள்** | |
| பில்லூர் 2 ஆம் திட்டத்திற்குத் தேவையான மொத்தத் தொகை | 113.74 கோடி ரூபாய் |
| மத்திய அரசின் மானியம் (50%) | 56.87 கோடி ரூபாய் |
| மாநில அரசு கொடுக்கும் (7 வருடத்தில் திருப்பி அடைக்க வேண்டிய) வட்டியில்லாக் கடன் (20%) | 22.748 கோடி ரூபாய் |
| மாநகராட்சி அளிக்க வேண்டிய பங்குத் தொகை (30%) | 34.122 கோடி ரூபாய் |

ஆண்டுதோறும் ஆகப்போகும் செலவு 3.5 கோடி ரூபாய்தான்!

தற்போது 1000 லிட்டருக்கு 4.50 ரூபாய் என்று உயர்த்தப்பட்டிருக்கும் தண்ணீர்க் கட்டணத்தின் மூலம் வருடாவருடம் தண்ணீரினால் கிடைக்கப் போகும் லாபமான 46.6 கோடி ரூபாயில் மேற்கூறிய செலவான 3.5 கோடி ரூபாயைக் கழித்தால் 43.1 கோடி ரூபாய் நிகர லாபம் கிடைத்திருக்கும்.

கடந்த காலக் கடன்களையும், தமிழக அரசுக்கு வருடா வருடம் செலுத்த வேண்டிய ஜவகர் கடன் தொகையையும், பில்லூர் இரண்டாம் திட்டத்திற்காக நிதி நிறுவனங்களிடம் இருந்து பெறப்போகும் 34 கோடி ரூபாய் கடன் மற்றும் வட்டித் தொகையையும் வருடா வருடம் தனக்குக் கிடைக்கும் 43 கோடி ரூபாய் லாபப் பணத்தை வைத்து அடுத்த சில வருடங்களுக்குள்ளாகவே கட்டி விட முடியும் என்பதையும் கணக்குகள் தெளிவாகவே விளக்குகின்றன.

ஒட்டுமொத்தத் தண்ணீர்க் கடனைக் கட்டிய பிறகு மக்களின் இந்தப் பணத்தைக் கொண்டு நகரத்தின் இன்ன பிற திட்டங்களையும் எவ்வித சங்கடங்களும் இன்றி நிறைவேற்றிக்கொள்ள முடியும்.

**உண்மை நிலைமை இதுதான்.**

இருப்பினும் பில்லூர் 2 ஆம் திட்டத்தை சர்வதேச டெண்டருக்கு விட்டுத்தான் தீருவோம் என்று சொல்லச் சொல்லி மாநகராட்சியை ஆட்டுவித்துக் கொண்டிருப்பவர்கள் யார்?

ஐ.எல்.எஃப்.எஸ், ஹெச்.டி.எஃப்.சி, ஐ.சி.ஐ.சி.ஐ. போன்ற சர்வதேச கந்து வட்டி ஈட்டு நிறுவனங்களும், உலக வங்கி மற்றும் USAID போன்ற வட்டிப் பேய்களும்தான் அவர்கள் என்று சொல்லவும் வேண்டுமா?

## பதிலீடுகள்

- மது

பயன்படுத்து
தூக்கியெறி
சுகித்திரு
உடைத்தெறி
சட்டமும் உயிரும்
உறவும் ஒரே
நிலுவையில் ஏற
புரிபடும் புதிய
கலாச்சாரம்!
உழைத்துப் பெறமுடியா
பலவும் போலி நிதிப்
பழக்கம் கிட்ட
கடன்பட்ட சமூகமாய்
மாறும் கூட்டம்!



இருக்கும் ஒவ்வொன்றிற்கும்
பதிலீடுகள் இருப்பதான
கனவு - சில பலிக்கும்
நடப்புகள் கூட
கரிக்கு மாற்றாய்
பிறிதொன்று - என்றைக்கு
மற்றொன்று - உறவிற்கு
மறு உறவென பதிலீடுகள்
கண்முன் தெரியாத வேகத்தில்
தாராளமய கதவுகள்
திறக்க ஊழிக்காற்றாக
உட்புகுந்து ஆற்றும் நுகர்வு

போலி மினுமினுப்பாய்
மாயக் கவர்ச்சியாய்
பணம் வீங்கி வாங்கும்
பதிலீடுகளை
**பேதைகள் அறியார்**
**பதிலீடே இல்லாத**
**ஒன்று**
**தண்ணீர் என்று!**

# கருத்து மேடை

## உள்ளாட்சியில் நல்லாட்சி

இரா.கோபாலன்

நமது நாடு கிராமங்களிலும் நகரங்களிலும் வாழ்கிறது. ஜனநாயகம் கிராமங்களிலும் நகரங்களிலும் உள்ள மக்களைச் சென்றடைய வேண்டும். ஜனநாயகத்தின் அடிப்படையாக இருப்பது கட்சிகளோ தனி நபர்களோ அல்ல. மக்களே ஜனநாயகத்தின் அடிப்படை. கிராமம், நகரம் என்ற கூட்டமைப்பில் தேசம் ஒருங்கமைக்கப் பட்டுள்ளது. இது மாவட்டம், மாநிலம், மையம் வரை மேல் நோக்கியுள்ளது.

1950 இந்திய அரசியல் சட்டம் மாநில-மைய அரசுகளின் அதிகாரங்களை வரையறுத்தது. அரசியலமைப்புச் சட்டம் 1992-ன் 73 மற்றும் 74-வது சட்டத் திருத்தம் கிராம பஞ்சாயத்து, நகராட்சிகளுக்கு தன்னாட்சி உரிமை (Local Self Governance) வழங்கியது. மத்திய ஆட்சி, மாநில ஆட்சி ஆகிய இரு படிநிலை ஆட்சிகளுடன் உள்ளாட்சி என்ற மூன்றாவது படிநிலை ஆட்சிக்கு இது வழி வகுத்தது. மாநிலத்திலும், மத்தியிலும் மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள் மொத்தம் 4900 பிரதிநிதிகள் உள்ளனர். நாடு முழுவதிலும் உள்ள பஞ்சாயத்துகள், நகர மன்றங்களுக்கு சுமார் 30 லட்சம் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். பஞ்சாயத்து, நகரசபை ஆகிய உள்ளாட்சி அமைப்புகளில்தான் மூன்றில் ஒரு பகுதி பெண்கள் இடம் பெற்றுள்ளார்கள். மாநில, மைய அமைப்புகளுக்கு பெண்களுக்கான இட ஒதுக்கீடு செய்யப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றும் வகையில் நல்லாட்சி அமைய வேண்டிய அமைப்பில் அரசியல் கட்சிகளுக்கு இடமளிப்பது நடைமுறையில் தீமைகளையே விளைவிக்கும் என்பது நிரூபணமாகி வருகிறது.

1992ல் மேற்படி சட்டத்திருத்தங்களை முன்மொழிந்த போது சட்டத் திருத்தத்திற்கான முக்கிய நோக்கம் என்ன?

“பல மாநிலங்களிலும் பல்வேறு காரணங்களால் உள்ளாட்சி அமைப்பு முறை மிகவும் பலவீனமானதாகவும் செயல் திறன் அற்றதாகவும் உள்ளது. முறையான தேர்தலின்றி, போதிய அதிகாரமோ நிதி ஆதாரமோ இன்றி செயல் இழந்து கிடக்கின்றன. மேலும் எல்லாத் தரப்பு மக்களுக்குமான போதிய பிரதிநிதித்துவம் வழங்கப்படவில்லை. ஆகையால் உள்ளாட்சி அமைப்புகள் சிறந்த ஜனநாயக அமைப்புகளாக திறம்பட செயல்படவில்லை. ஆகவே இந்தக் குறைகளை களையும் வகையில் அரசியல் சட்டத்தில் உரிய திருத்தத்தை கொண்டுவருவது மிக மிகத் தேவையாகும்.” *(அரசியல் சட்டம் 1993, 73வது சட்டதிருத்தம் ஷ நோக்கமும் காரணமும்)*

இந்த சட்ட திருத்தத்திற்கு இணங்க கோவை மாநகராட்சி முறையான தேர்தலை கண்டிருக்கிறது. இனி, சிறந்த ஜனநாயக உள்ளாட்சியை நிறுவுவதற்கு போதிய அதிகாரத்தையும் நிதி ஆதாரத்தையும் பெறுவதற்கான முயற்சியில் இறங்கியுள்ளது. ஆனால் ஜவகர் நகர மேம்பாட்டுத் திட்ட அமலாக்கத்தில் மாநகராட்சி தனது உள்ளாட்சி அதிகாரத்தை கடன் தரும் தனியார் நிறுவனங்களுக்கு ஒப்புக்கொடுக்கும் அபாயம் எழுந்துள்ளது. நகர மேம்பாட்டுக்கான முக்கிய முடிவுகள் நகராட்சி மனறத்தில் கூட விரிவாக விவாதிக்கப்படாமல் அமல் படுத்தும் போக்கு மிகவும் கவலைக்குரியது.

ஜவகர் நகரப்புனரமைப்பு திட்டத்தை அறிவித்தபோது இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் கூறியது இங்கே நினைவு கூறத்தக்கது “உள்ளாட்சி நிர்வாகத்தில் மக்கள் தாமாக முன்வந்து பங்கெடுக்க வேண்டும். சீர்திருத்தங்களை நாம் மேலிருந்து திணிக்க முடியாது.” “சிறப்பான, பொறுப்பான, வெளிப்படை தன்மை கொண்ட நகராட்சி தான் மக்களுக்குத் தேவை. அதுமட்டுமின்றி, நகராட்சி ஊழல் என்னும் புற்றுநோயிலிருந்தும் நில முதலைகளின் கோரப் பிடியிலிருந்தும் விடுவிக்கப்பட வேண்டும்” “நகரப் புனரமைப்பு என்பது மேம்பாலங்கள், விரைவுப்பேருந்துகள், ‘மெட்ரோ’, பாதாள வாகனங்கள் மட்டுமே அல்ல. புனரமைப்பு என்பது அடிப்படையில் நகரப் பகுதியில் உள்ள அனைத்து மக்களின், குறிப்பாக ஏழை மக்களின், வாழ்க்கை தரத்தை உயர்த்துவதாகும்” *(இந்து நாளேடு 22.06.2006)*

ஜவகர் தேசிய நகரப் புனரமைப்புத் திட்டத்தின் அறிவிக்கப்பட்ட நோக்கம் இவ்வாறிருக்க கோவை மாநகராட்சி கோவை மக்களின் உரிய பங்கெடுப்பு இல்லாமலும் வெளிப்படைத்தன்மை இல்லாமலும் நகர மேம்பாடு என்னும் பெயரில் பெரும் கடன் சுமைக்குள் தள்ளவிருக்கிற திட்டங்களை மக்கள் மீது சுமத்துவதின் நோக்கம் என்ன? மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நகராட்சி உறுப்பினர்களும், மக்களும் இந்த விவாதத்தை முன்னெடுத்து செல்ல வேண்டாமா?

## கூண்டுகளில் அடைபடும் மனிதர்கள்: ஜவகர் திட்டத்தின் குடிசைமாற்று

மகேந்திரன்,
*தமிழ்நாடு அண்ணல் அம்பேத்கர் துப்புரவு மற்றும் பொதுப் பணியாளர்கள் சங்கம்*

ஏறக்குறைய 3224 கோடி ரூபாய் நகரப் புனரமைப்புத் திட்டத்தில் 2254 கோடியை பாலங்களும், சாலைகளும் விழுங்கியது போக மிச்சமிருக்கும் 30 விழுக்காட்டில் பல அடிப்படைத் திட்டங்களில் ஒன்றாக குடிசைப் பகுதிகளுக்கென 403 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது (271 கோடி ரூபாய் வீடுகளுக்கு, 122 கோடி மற்ற வசதிகளுக்கு). பாலங்களும் சாலைகளும் கட்டி நகரம் முன்னேறியிருக்கும்போது நகரில் குடிசைகளே இருக்காது என்கிற அளவுக்கு திட்டம் செயல்படப் போவதாக மாநகராட்சி நிர்வாகம் கூறியுள்ளது. இந்த வீடுகளின் அளவு 268 சதுர அடி என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மொத்தத் திட்டத் தொகையான 3224 கோடி ரூபாயில் 5% ஆன ஆலோசனைக் கட்டணம் ஏறக்குறைய 155 கோடி

ரூபாய் நம் நாட்டை விட்டு வெளியேறி விட்டது அல்லது வெளியேறப் போகிறது என்பதை நினைவு படுத்திக் கொண்டு குடிசைகளை வீடாக்க ஒதுக்கப்பட்டிருக்கும் இந்த 271 கோடி ரூபாயில் எத்தனை வீடுகள் கட்ட முடியும் என்கிற கணக்கை போட்டுப் பார்த்தால் பெரும் ஏமாற்றமே மிஞ்சும்.

சில அடிப்படை விவரங்களை மாநகராட்சியிடம் கேட்டபோது ஏறக்குறைய எல்லாக் கேள்விகளுக்கும் மாநகராட்சி சொன்ன பதில்: **"சர்வே நடைபெற்றுக்கொண்டிருக்கிறது".** அதில் சில கேள்விகள்: **குடிசைகளின் எண்ணிக்கை எவ்வளவு? அதில் வாழும் மக்கள் தொகை என்ன?** இப்படியான அடிப்படைக் கேள்விகள் தான். (RTI விண்ணப்பம் - பிப்ரவரி 2007). எந்த அடிப்படை விவரமும் தெரியாது. ஆனால் வீடுகளுக்காக ஒதுக்கப்பட்ட தொகையோ 271 கோடி என்று அதற்கு முன்னதாகவே முடிவு செய்யப்பட்டு விட்டது.

சென்னை, மதுரை, கோவை என தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழக நகரங்களில் கோவைக்கான முதல் அறிக்கையில் மட்டும் குடிசைப்பகுதிகளுக்கான சரியான விவரங்களே இல்லாமல் போனதன் அலட்சியத்திற்கு யார் காரணம் அல்லது எது காரணம்? CDP சொல்கிறது. "மூன்றில் ஒரு பங்கு மக்கள் குடிசையில் வசிக்கிறார்கள்". அப்படியென்றால் 10 இலட்சத்தில் 3.3 இலட்சம் பேர். அவர்களுக்கு 271 கோடியில் எத்தனை வீடுகள்தான் கட்ட முடியும்? (ஒரு வீட்டுக்கு ஏறக்குறைய ஒரு இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய் ஆகும்) யாருமே பதில் கூற மறுக்கிறார்கள்.

குடிசைப் பகுதியில் வாழும் மக்கள் நெருக்கடியுடனும், சுகாதாரமின்றியும் வாழ்வதால்தான் பல்வேறு நலத்திட்டங்களின் மூலமாக குடியிருப்புகள் கட்டித் தரப்படுவதாக அறிவிக்கப்படுகிறது. ஆனால், குடிசை வாசிகளுக்கும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் அரசு கட்டிக் கொடுக்கும் வீடுகளின் நிலை என்ன? அவற்றின் தரம் எத்தகையது? கோவை வி.எச். ரோடு, அம்மன் குளம், காமராஜர் புரம் பகுதிகளில் கட்டிக் கொடுக்கப்பட்ட வீடுகளின் தரத்தைப் பார்த்தால் இனி கட்டிக்கொடுக்கப்படும் வீடுகளின் தரம் எப்படி இருக்கப்போகிறது என்கிற உண்மை தெரிந்து விடும். படிகள் இடிந்து விழுந்த வீடுகள் எத்தனை? கூரைகள் கட்டும் போது இரும்புக் கம்பிகள் பயன்படுத்தப்பட்டன என்பதை ஏறக்குறைய எல்லா வீடுகளும் வெளிக்காட்டிக் கொண்டிருக்கும் அவலம் ஏற்பட்டது எப்படி? கோவை ரேஸ் கோர்சில் உள்ள அரசு அலுவலர் குடியிருப்புகளும் இதிலிருந்து தப்பவில்லையே. அவ்வாறு இருக்காது என்பதற்கு உத்திரவாதத்தை யாராவது தந்துவிடப்போகிறார்களா?



இந்த செய்தியை கொஞ்ச காலம் முன் கோவை வ.உ.சி. பூங்காவில் உள்ள மிருகக்காட்சி சாலையில் மிருகங்களுக்கு இருப்பிடம் கட்டிய செய்தியோடு ஒப்பிட்டு பார்ப்போமா? "இரண்டு குரங்குகள் வாழ 516 சதுர அடியில் கூண்டுகள், நல்ல காற்றோட்டம் மிக்கதாகவும், சுகாதாரத்துடனும் அமைக்கப்பட்டிருக்கிறது."

மாநகர புனரமைப்புத் திட்டத்தின் முதல் அறிக்கை சொல்கிறது "தற்சமயம் ஒவ்வொரு குடிசையிலும் 5 பேர் வசிக்கிறார்கள்." (பட்டியல் 7.6 - CDP பக்கம் 94)

ஆக தற்சமயம் 5 மனிதர்களுக்கு 268 சதுர அடி. 2 குரங்குகளுக்கு 516 சதுர அடி. தர நிர்ணயத்தின் நேர்மை எப்படியிருக்கிறது பார்த்தீர்களா?

மற்றொரு மாபெரும் முன்னேற்றம் - குளக்கரை வீடுகளையும் மாநகராட்சிக்கு தேவையான இடங்களில் இருக்கும் வீடுகளையும் அப்புறப்படுத்தி மாற்று இடமாக புல்லுக் காட்டில் (சி.எஸ்.ஃபார்ம், உக்கடம்) வீடுகள் கட்டிக் கொடுக்க இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. கோவையின் மனிதக் கழிவுகள் பல பத்தாண்டுகளாக பாய்ந்து வளமான பூமி இந்த புல்லுக்காடு. தொற்று நோய் பாதிப்பு அதிகம் ஏற்பட வாய்ப்பான இடம். ஆனால் அப்படியொன்றும் ஏற்படாது என்று மாநகராட்சி நிர்வாகம் கூறி வருகிறது.

இது உண்மையென்றால் அரசு உயர் அதிகாரிகளுக்கும், நாட்டை வல்லரசாக்கப் போகும் அரசியல்வாதிகளுக்கும், ஜவகர் திட்டத்தை நடைமுறைப்படுத்தப்போகும் பல்நாட்டுக் கம்பெனி அதிகாரிகளுக்கும் வீடுகளோ அல்லது அலுவலகங்களோ கட்டி விழா எடுத்துக் குடி போகட்டும். நோய் எதிர்ப்பு சக்தி அவர்களுக்கு எந்த அளவு இருக்கிறது என்பதை சோதித்தறிந்து விட்டு பின் குடிசைப் பகுதி மக்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கட்டும். பின்பற்றத் தகுதியானவர்கள்தான் அவர்கள் என்கிற மாபெரும் உண்மையை குடிசைப்பகுதி மக்களோடு சேர்ந்து அனைவரும் அறிந்து கொண்டு பாராட்டுவோம்.

இந்நகருக்காக உழைத்த மக்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கவோ பட்டா வழங்கவோ நல்ல இடமே இல்லையா கோவை மாநகரில்? நூற்றுக்கணக்கான ஏக்கர் அரசு நிலங்களை தனியாருக்கு தானம் வழங்கி தொழில் வளர்ப்பதாய் தொப்பை வளர்க்கும் அரசியல் வாதிகளும் அதிகாரிகளும் மக்களுக்கு அடிப்படை வசதி எனும் போது மட்டும் நிலமில்லை என்கிறார்கள். அரசுச் சொத்தான 99 வருட குத்தகை நிலங்கள் தனியார் நிலங்களாக மாற்றம் பெற்று விட்டனவா? செயல் படாமல் நின்று போன அரசு தொழிற்சாலை நிலங்கள் முதலாளிகளுக்காகக் காத்திருக்கிறதா?

இன்னுமொரு அடிப்படைக் கேள்வியோடு தற்போது முடித்துக் கொள்ளலாம். பாலங்கள், சாலைகள், வண்டி நிறுத்துமிடங்களுக்கு உலகத்தரம் என நிர்ணயிக்கும் மாநகர நிர்வாகமும், அவர்களை இயக்கும் பன்னாட்டுக் கம்பெனிகளும் மனித வாழிடங்களுக்கு உலகத்தரம்தான் என்ன என்பதை அறிவிப்பார்களா? உலகத்தரத்தை விட்டு விடுங்கள். உள்ளூர் தரத்தையாவது அறிவிப்பார்களா? செய்ய மாட்டார்கள். அவர்களுக்கு தேவை மக்களல்ல. மக்கள் பெயரை சொல்லிக்கொண்டே அடிக்கப்போகும் கொள்ளையும், பன்னாட்டுக் கம்பெனிகளால் அவரவர் நாடுகளுக்கு இன்னும் 20 ஆண்டுகளுக்காவது நம்மைச் சுரண்டி அனுப்பி வைக்கப்படப்போகும் நம்முடைய செல்வமும்தான்.

## சிதம்பர ரகசியம் என்ன?

கோப்மா கருப்பசாமி

ISI முத்திரை பெறாத பம்ப்செட்உற்பத்தி மீது 8% கலால் வரி விதிக்கும் ப.சிதம்பரத்தின் முடிவுக்கு கோவை பம்பு செட் உற்பத்தியாளர்களிடமிருந்தும் அதைச் சார்ந்துள்ள தொழிலாளர்களிடமிருந்தும் கடுமையான எதிர்ப்பு கிளம்பியது. 2006 ஆம் ஆண்டு கோவையில் நடந்த மக்கள் போராட்டங்களில் பெரும்பாலான மக்கள் மற்றும் ஊடகங்களின் கவனத்தை ஈர்த்ததில் முதலாவதும் இரண்டாவதும் ஆன இடத்தைப் பெற்றது பம்பு உற்பத்தியாளர்களின் போராட்டம் தான். பாதிக்கப்படக்கூடிய உற்பத்தியாளர்கள் மற்றும் தொழிலாளர்களின் நியாயமான கோரிக்கைகள் அந்தப் போராட்டங்களில் வெளிப்பட்டன.

2006 மார்ச் மாதத்தில் 300க்கும் மேற்பட்ட உற்பத்தியாளர்கள் கலந்து கொண்ட உண்ணாவிரதப் போராட்டம் நடந்தது. இந்த போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து நம்முடைய தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் சட்டமன்ற உறுப்பினர்கள், இன்றைய ஊரகத் தொழில்துறை அமைச்சர் மற்றும் கோவை வர்த்தகசங்கம் கூட்டமைப்பு, கொடிசியா, சீமா, கோ இண்டியா, காஸ்மாபேன், கௌமா போன்ற அனைத்து சங்க நிர்வாகிகளும் ஆதரவு தெரிவித்து உரையாற்றினார்கள்.

போராட்டத்திற்கு பின்னால் நமது பாராளுமன்ற உறுப்பினர், கொடீசியா தலைவர், கோஇண்டியா தலைவர் ஆகியோரோடு போராட்டக்குழு தலைவர்கள் சென்று ப. சிதம்பரத்தை நேரில் சந்தித்து மனு கொடுத்தார்கள். சட்டத்தை திரும்பப் பெற முடியாது, நான்கு மாத அவகாசம் மட்டுமே தர முடியும் என்று சிதம்பரம் சொல்லிவிட்டார்.

கொடுத்த நான்கு மாத அவகாசத்தில் ISI முத்திரை பெற முயற்சி மேற்கொள்ளலாம் என ஒரு சிலரும், அனைவரும் முத்திரை பெறுவது சாத்தியமில்லை, கொடுத்த அவகாசத்தில் அமைப்பைப் பலப்படுத்தி போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லலாம் என பெரும்பாலோருமாக பம்ப் உற்பத்தியாளர்களுக்குள் வாத பிரதிவாதங்கள் வலுத்தன.

முதலாமவர்கள் ISI முத்திரைக்கு எதிராக நாம் பேசி சாதிக்க முடியாது, அதிலும் ப.சிதம்பரம் அவர்கள் தான் கொண்ட கருத்தில் பிடிவாதமாக இருப்பவர், எனவே போராடி சாதிக்க முடியாது, நம்முடைய சிரமங்களை எடுத்துச் சொல்லி பரிகாரம் காணலாம் என்றனர்.

இரண்டாமவர்களோ ISI முத்திரை தேவையா இல்லையா என்பதை நுகர்வோர் தீர்மானிக்கட்டும், அதை விடுத்து அரசு சட்டம் போட்டு நிர்பந்தப்படுத்துவது பெரு நிறுவனங்களுக்கு ஆதரவான செயல், இங்கு இருக்கிற ஒன்றிரண்டு பெரிய முதலாளிகளின் நிர்பந்தத்தின் பேரில் நிதியமைச்சர் இதைச் செய்துள்ளார், ஆகவே இந்தச் சட்டத்தால் ஆதாயம் பெறும் பெருமுதலாளிகளை கூடவே வைத்துக் கொண்டு போராடினால் போராட்டம் திசை திரும்பிவிடும், அவர்கள் கீழறுப்பு வேலையை செய்வார்கள், எனவே அவர்களையும் அவர்களுக்கு ஆதரவான அரசியல்வாதிகளையும் விலக்கி வைத்து போராட்டத்தைத் தொடரலாம், சட்டத்தைத் திரும்பப் பெறும் வரை உறுதியாகப் போராடலாம் என்று தீர்மானித்தார்கள்.

அதன்படி சொந்தக் கட்டிடமோ, போதுமான இட வசதியோ, முத்திரை பெறுவதற்கான ஆரம்ப முதலீடோ செய்ய முடியாமல் இந்தச் சட்டத்தின் விளைவாக மூட வேண்டிய நிலைமையிலுள்ள அனைத்து நிறுவனங்களையும் அணிதிரட்டி ஜூலை 12, 2006 அன்று சுமார் இரண்டாயிரம் பேர் கலந்து கொண்ட மாபெரும் ஆர்ப்பாட்டம் நடந்தது. எந்த அரசியல் கட்சியின் வழிகாட்டுதலும் இல்லாமல் கோரிக்கை முழக்க அட்டைகளைக் கையில் ஏந்திக் கொண்டு பம்ப் உற்பத்தியாளர்கள் செய்த முழக்கம் அனைத்து அரசியல் கட்சிகளையும் பத்திரிக்கை மற்றும் தொலைக்காட்சி ஊடகங்களையும் ஆச்சரியப்பட வைத்தன. இப்போராட்ட செய்தியைக் கேட்டு முன்னால் முதல்வர் அவர்களே போராட்டத்திற்கு ஆதரவாகப் பேட்டியளித்தார், அனைத்துக் கட்சிகளும் வெளிப்படையாக ஆதரவு தெரிவித்தன.

அதுவரை எங்களைச் சந்தித்துப் பேசவே மறுத்து வந்த நிதியமைச்சர் பேச்சுவார்த்தைக்கு ஒப்புக் கொண்டார், தங்கபாலு (காங்), பி.மோகன் (CPI (M)), அப்பாதுரை ( CPI), கிருஷ்ணமூர்த்தி, பவானி ராசேந்திரன் (தி.மு.க) ஆகியரோடு கோப்மா நிர்வாகிகள் நால்வரும் ஆகஸ்ட் 3, 2006 அன்று நிதியமைச்சரை சந்தித்தோம், அந்த பேச்சுவார்த்தையின் போதுதான் நிதியமைச்சரின் இன்னொரு பக்கத்தை அனுபவ ரீதியாக உணர்ந்து கொண்டோம்.

(தொடரும்)

## தகவல் பெறும் உரிமைச் சட்டமும், தகவல் தர மறுக்கும் கோவை மாநகராட்சி அதிகாரிகளின் கொட்டமும்

வழக்குரைஞர் மு.கார்க்கி

கோவை மக்கள் கண்காணிப்புக் குழுவின் சார்பாக நகரத்தின் பாதாள சாக்கடைத் திட்டம், பில்லூர் இரண்டாம் குடிநீர்த் திட்டம், திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் ஆகியவற்றிற்கான விரிவான திட்ட அறிக்கைகளை (Detailed Project Reports) தகவல் பெறும் உரிமை சட்டத்தின் கீழ் மாநகராட்சியிடம் 17-05-2007 அன்று கேட்டு மனு செய்தோம். கேட்ட தகவல்களை 30 நாட்களுக்குள் கொடுக்க வேண்டும் என்பது சட்டம். ஆனால் நாங்கள் கேட்ட தகவல்களைக் கொடுத்தால் ஜவகர்லால் நேரு நகரப் புனரமைப்புத் திட்டத்தின் மூலம் கோவை நகரில் நடக்கும் மோசடிகள் அம்பலமாகிவிடும் என்று நினைத்தார்களோ என்னவோ தகவல்களைத் தர இழுத்தடித்தார்கள். பல முறையீடுகளுக்குப் பிறகும் அவர்கள் மசியவில்லை. தகவல் பெறும் சட்டத்தை மீறத் துணிந்தார்கள். 30 நாட்களுக்குள் கொடுக்க வேண்டிய பதிலை 62 நாட்கள் கழித்தும் கொடுக்கவில்லை. மாறாக 19.07.2007 அன்று மாநகராட்சியின் தலைமைப் பொறியாளர் கையெழுத்திட்ட பதில் கடிதத்தை என் அலுவலகத்தில் நான் இல்லாத சமயத்தில் போட்டுவிட்டுப் போய்விட்டார்கள்.

எப்படியோ... கிடைத்தது என்று மகிழ்ச்சியுடன் திறந்து பார்த்தபோது அதிர்ச்சிதான் மிஞ்சியது. நாம் கேட்டது மூன்று திட்டங்களுக்கான விரிவான திட்ட அறிக்கைகளை. அவர்கள் அளித்த பதில் கடிதத்தில் "பாதாள சாக்கடைத் திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கையை மாநகராட்சியின் இணைய தளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்" என்று மட்டும் இருந்தது. இணைய தளத்தைத் திறந்து பார்த்தபோது கூடுதல் அதிர்ச்சி காத்திருந்தது. பதில் கடிதத்தில் குறிப்பிடப் பட்டிருந்த பாதாள சாக்கடைத் திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கை அதில் காணப் படவில்லை. மாறாக, குடிசை மேம்பாடு மற்றும் திடக்கழிவு மேலாண்மைக்கான விரிவான திட்ட அறிக்கைகள் மட்டுமே அதில் இருப்பதைப் பார்க்க முடிந்தது.

அதிகாரிகளுடன் மோதல் வேண்டாம் என்ற அடிப்படையில் மாநகராட்சியின் தலைமைப் பொறியாளர் திரு.ராசுவை நேரடியாக சந்தித்து முறையிட்டேன். தனக்குக் கீழ் பணிபுரியும் பொறியாளர் திரு.லட்சுமணனை சந்திக்கச் சொன்னார். அவரிடம் செல்பேசி மூலம் உடனடியாகத் தொடர்பு கொண்டேன்."இதோ வந்து விடுகிறேன், காத்திருங்கள்" என்று சொன்னார். காலை 10 மணியில் இருந்து மாலை 5 மணிவரை காத்திருக்க நேரிட்டது.மாலை 5.05 அளவில் தலைமைப் பொறியாளரின் அலுவலக அறைக்கு சாவகாசமாக வந்து சேர்ந்தார். "தாங்கள் எனக்களித்த பதில் கடிதத்தில் தவறான தகவல்கள் உள்ளன. மேல்முறையீடுக்கு நான் சென்றால் உங்களுக்குப் பிரச்சினை கட்டாயம் வரும்" என்றேன். பரபரப்பானார். இணைய தளத்தை (முதல் முறையாக அப்போதுதான் திறந்து பார்க்கிறார் என்பதுபோல) திறந்து பார்க்க முயற்சித்தார். இணைய தளத்தில் உள்ள குறிப்பிட்ட இடத்திற்கு செல்ல அவருக்கு நான் உதவ வேண்டி வந்தது என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்! "இன்னும் கம்ப்யூட்டரில் போடவில்லை போலிருக்கிறது! இன்று இரவே பாதாள சாக்கடைத் திட்டத்தின் அறிக்கையை போடச் சொல்கிறேன். நாளை நீங்கள் அதைப் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்" என்றார். "பில்லூர் இரண்டாம் திட்டத்தின் விரிவான திட்ட அறிக்கையைப் பற்றி ஒன்றும் கூறவில்லையே" என்றேன். தலைமைப்பொறியாளர் ராசுவைப் பார்த்தார். கண்களை மூடி மூடித் திறந்த தலைமைப் பொறியாளர் தனக்குள்ளேயே ஏதோ பேசிக் கொண்டார். "சிறிது கேட்கும்படிதான் பேசுங்களேன்" என்றபோது "பில்லூர் விரிவான திட்ட அறிக்கையை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியக்காரர்கள் தட்டச்சு செய்துதான் கொடுத்திருக்கிறார்கள். பழைய காலத்து ஆட்கள்... அதை ஸ்கேன் செய்து போட வேண்டும்" என்றார். "அறிக்கையை குடிநீர் வடிகால் வாரியத்திடம் இருந்து வாங்கி பல காலம் ஆயிற்றே... மத்திய அமைச்சகம் அந்தத் திட்ட அறிக்கைக்குத் தொழில் நுட்ப அங்கீகாரத்தை வழங்கியும் பல மாதங்கள் ஆகிவிட்டதே... இன்னுமா ஸ்கேன் பண்ணுகிறீர்கள்?" என்றேன். பதிலைச் சொல்லாமல் தலையைக் குனிந்து ஃபைல்களில் மூழ்கிய அவர், மிகவும் மெதுவாக "பார்ப்போம்...." என்று மட்டும் கூறி விடை கொடுத்தார்.

5 நாட்கள் கழித்து இணைய தளத்தில் பாதாள சாக்கடைத் திட்டத்தின் விரிவான திட்ட அறிக்கை என்று கூறப்படும் 90 பக்க அறிக்கை ஒன்றை ஏற்றியிருக்கிறார்கள். பில்லூர் இரண்டாம் கட்டத் திட்டத்தின் விரிவான திட்ட அறிக்கையை இணைய தளத்தில் இன்றுவரை அவர்கள் போடவில்லை!

எனவே வேறு வழியின்றி மாநகராட்சி நிர்வாகத்தின் போக்கு குறித்து மேல் முறையீடு செய்துள்ளோம். தவறான தகவல் தந்த தலைமைப் பொறியாளர் மீது தக்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று கோரியிருக்கிறோம்.

# "கோவையின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கப் போகும் 3 ஆயிரம் கோடி ரூபாய் திட்டத்தில் மாநகராட்சி தன்னிச்சையாக செயல்படுகிறது"



**சுப்பராயன் எம்.பி.**

■ கோவை நகருக்கு ஜவகர்லால் நேரு புனரமைப்புத் திட்டம் அவசியமானது. இந்தத் திட்டத்துக்கு 3 ஆயிரத்து 189 கோடி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

■ அதிகத் தொகை ஒதுக்கீடு செய்யப்படுகிற இந்தத் திட்டத்தில் மாநகராட்சி நிர்வாகத்தின் செயல்பாடு வெளிப்படையாக இருக்க வேண்டும். ஆனால் வெளிப்படையாக இல்லாதது துரதிர்ஷ்டவசமானது.

■ விரிவான திட்ட அறிக்கை குறித்து கூட மாநகராட்சி கூட்டத்தில் விவாதிக்கப்படவில்லை.

■ மாநகராட்சி நிர்வாகம் மேயரையும், கமிஷனரையும் மட்டுமே சார்ந்தது அல்ல. பொது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அனைத்து கவுன்சிலர்களையும் அழைத்து விவாதித்து செயல்படுத்த வேண்டும்.

■ இது தொடர்பான செயல்பாட்டுக் குழுவில் கவுன்சிலர்களைப் புறக்கணித்து இருப்பதும் கண்டிக்கத் தக்கது.

■ இந்தத் திட்டத்துக்கு மத்திய அரசு 50 சதவீத பங்களிப்பும், மாநில அரசு 20 சதவீதம் பங்களிப்பும் கொடுக்கின்றன. மீதியை மாநகராட்சி செலுத்த வேண்டும். மாநகராட்சி ரூ.1000 கோடி அளவுக்கு இந்தத் திட்டத்துக்கு கொடுக்க வேண்டிய நிலை உள்ளது.

■ மாநில அரசு கொடுக்கக் கூடிய நிதி வட்டியில்லாக் கடனாகத்தான் கொடுக்கப் படுவதாகத் தெரிகிறது. இதை மானியமாகப் பெற நடவடிக்கை எடுக்க வேண்டும்.

■ மக்களிடம் ரூ.1000 கோடியைத் திரட்டுவதற்காக மாநகராட்சி அதிக சுமையை சுமத்தக் கூடாது. இது குறித்து மாநகராட்சி இதுவரை விளக்கம் அளிக்கவில்லை.

■ இந்தத் திட்டத்தைக் கண்காணிக்க மாநில அளவில் ஒரு கண்காணிப்புக் குழுவை ஏற்படுத்த வேண்டும். ( 8.8.2007)